


இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524









29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாராந்த செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1586 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday August 28, 2026













# "இனிவரும் காலங்களில் கனடாவில் தொல்காப்பியம் நூல் பற்றிய அறிவைப் பெற்ற இளைய தலைமுறை ஒன்று நிச்சயம் உருவாகும்"

## கனடாவில் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள "2வது தொல்காப்பிய மாநாடு" தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் மன்றத்தின் முன்னாள் தலைவர் தங்கராசா சிவபாலு தெரிவிப்பு!

"தொல்காப்பியம்" 2000 ஆண்டுகளுக்கு முன்னர் எமக்காகப் படைக்கப்பெற்ற ஒரு நூலாகும். அது எமது மொழியின் இலக்கணம் பற்றியும் நாகரிகம் பற்றியும் உள்ளடக்கத்தை கொண்டது மாத்திரமல்ல. எமது தமிழ் மக்களின் வாழ்வியலை இறுகப் பற்றிக் கொண்ட ஒரு "வேர்" ஆகும்.

கனடாவில் தொல்காப்பிய மன்றம் நிறுவுப்பெற்றதற்கு பின்னர் அந்த நூல் பற்றிய தேடல் பலரிடத்தில் உருவாகியிருப்பது மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தரும் ஒரு செய்தியாகும். எம் மத்தியில் மாணவர்கள் மத்தியிலும் "தொல்காப்பியம்" பற்றிய புரிதலை ஏற்படுத்த "மாணவர் பாசறை" ஒன்று கனடாவில் ஆரம்பிக்கப்பெற்றுள்ளது. எனது பார்வையில் "இனிவரும் காலங்களில் கனடாவில் தொல்காப்பியத்தையும் தொல்காப்பியரையும் பற்றிய அறிவைப் பெற்ற இளைய தலைமுறை ஒன்று நிச்சயம் உருவாகும்" என்பதை நான் மிகுந்த நம்பிக்கையுடன் பதிவு செய்கின்றேன்". (தொடர்ச்சி 7ம் பக்கம்)




# றொறன்ரோவில் உங்கள் மத்தியில் "ராஜகோபுரம் எங்கள் தலைவன்" பாடல் புகழ் கோவை கமலா 28ம் திகதி வெள்ளிகிழமை மேடையில் தோன்றுகின்றார்!




தமிழ்நாட்டின் பிரபல பக்திப் பாடகி கோவை கமலா அவர்கள் தற்போது கனடா வந்துள்ளார். இன்று 28ம் திகதி வெள்ளிக்கிழமையன்று மாலை ஸ.காபுறோவில் உள்ள சீனக் கலாச்சார மண்டபத்தில் இவரது இசை நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

றொறன்ரோவில் உங்கள் மத்தியில் "ராஜகோபுரம் எங்கள் தலைவன்" பாடல் புகழ் கோவை கமலா அந்த மேடையில் தோன்றுகின்றார் தலைவர் பிரபாகரன் அவர்களைப் போற்றிப்பாடும் "ராஜகோபுரம் எங்கள் தலைவன்" என்ற அற்புதமான பாடலின் கம்பீரமான குரலுக்கு இவர் சொந்தக்காரி. இந்தப் பாடலுக்கு இசையமைத்தவர் தேனிசைச் செல்லப்பா அவர்கள்.

ஸ்காபுறோவில் இன்று வெள்ளிக்கிழமை 28ம் திகதி நடைபெறும் நிகழ்ச்சிக்கான ரிக்கட்டுக்களைப்பெற்றுக்கொள்ள:
**https://www.ticketmi.ca** அல்லது 647.938.1500

# ஆகஸ்ட் 30ம் திகதி அன்று மாலை ஸ்காபுறோவில் நடைபெறும் செம்மணி எழுச்சி – அணையா தீபம் என்ற கருப்பொருளோடு "விழித்தெழு" கண்டனப் போராட்டம்!

பிகைன்ட் மீ ஊடக நிறுவனம் மற்றும் பிகைன்ட் மீ அறக்கட்டளை இணைந்து நடத்தும் மேற்படி "விழித்தெழு" என்ற பெயரில் கனடாவில் நடைபெறும் மாபெரும் கண்டனப் போராட்டம்- செம்மணி எழுச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை **150 Borough Drive** ஸ்காபுறோ என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **ALBERT CAMPBELL SQUARE** திறந்த வெளி அரங்கில் நடைபெறுகின்றது. தொடர்புகளுக்கு 647.627.7814, 647.989.2539, 647.302.1189 ஆகிய இலக்கங்களை அழைக்கவும். (உள்ளே விளம்பரத்தைப் பார்க்கவும்)










Medcentre Health
Synchronizing Health Sectors

Medcentre Family Clinic
ACCEPTING NEW PATIENTS
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள்
Dr. விஜிதா முகுந்தன் MD, CCFP
கனடாவில் மருத்துவப்பயிற்சி பெற்று 7 ஆண்டு கனடாவில் குடும்ப மருத்துவராக பணியாற்றியவர்.
அழையுங்கள் : 416-297-7777
எமது மருத்துவ நிலையம் தினமும் திறந்திருக்கும்

எமது சேவைகள்

Medcentre Family Clinic
Comprehensive Care
Patient-Centred Care
For Children, Adults & Seniors
416-297-7777

Medcentre Urgent Care
Urgent Care Centre
Walk-In Clinic
Life Lab Collection Centre
416-297-7777

Medcentre Pharmacy
Same-day Home delivery
All Insurances Accepted
Pharmacist Consultation
416-609-3333

Medcentre Women's Health Care
Cancer Screening (Cervical & Breast)
Family Planning (Contraception)
Sexually Transmitted Infections (STI)
416-331-8888

2225 Markham Road, Ground Floor, Scarborough, ON M1B 2W4
(Markham Rd. & Finch Ave.E)
medcentrehealth.com

உதயன் கதிரோட்டம்

# தமிழர் தாயகத்தில் 30ம் திகதி நடைபெறும் "காணாமல் ஆக்கப்பட்டோர் தின மாநாடு" வெற்றியடையவும் உறவுகளின் துயர் நீங்கவும் பிரார்த்தனை செய்வோம்!

இலங்கையின் வடக்கு கிழக்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கும் தமிழர் தாயகப் பிரதேசகத்தில் நீண்ட காலமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கங்களை அமைத்து போராடி வரும் நிலையில் அவர்கள் தங்கள் உறவுகளை மீண்டும் சந்திக்கும் வாய்ப்புக்களோ அன்றி அவர்கள் எங்கு உள்ளார்கள்? அல்லது எந்தச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்? அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிரோடு இல்லையா? அவ்வாறானால் அவர்களது உடலங்கள் எங்கே? என்ற தகவல்களைக் கூட பெற்றுக் கொள்ள முடியாமல் இத்தனை ஆண்டுகள் கழிந்து விட்டன என்ற ஏக்கத்தில் அவர்களது உறவுகள் நடத்தும் போராட்டங்கள் தொடர்ந்த கொண்டே போகின்றது தவிர அவர்கள் எதிர்பார்த்த எந்த விடயமும் அரசாங்கத்தின் தரப்பிலிருந்தோ அன்றி படையினர் தரப்பிலிருந்தோ அன்றி வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்தோ இன்றுவரை கிட்டவில்லை என்பதே உண்மை.

இந்த தொடர் போராட்டங்கள் ஆண்டு பலவாக நீண்டு கொண்டே போனாலும், தங்கள் உறவுகளை எதிர்பார்த்து காத்திருந்தவர்களின் ஆயிரக்கணக்கானவர்கள் துயரத்தின் உச்சத்திற்குச் சென்று இவ்வுலக வாழ்வேயே நீத்துக் கொண்டார்கள் என்பதும் இன்னொரு வகையான துயரத்தின் வடிவமே ஆகும். தங்கள் உறவுகள் இன்னும் உயிர்வாழ்கின்றார்களா? சிறைகளில் துன்பங்களை அனுபவிக்கின்றார்களா என்ற விபரங்களைத் தெரிந்து கொள்ளாமலே போராடியவர்கள் மடிந்து போக அவர்களை புகைத்த மயானங்களில் புற்கள் முளைத்து அனைத்து முயற்சிகளும் விரயமாகிப் போன கவலையும் அதனால் தோன்றும் கோபமும் அதிகரிக்கச் செய்கின்றன.

மேலும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறைகளில் நம்பிக்கை இழந்து நிலையில், சர்வதேச நீதிப் பொறிமுறையின் அவசியத்தை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுசெல்வதற்காக எமது தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களை பலமுறை சந்தித்து உரையாடியும் அதனால் பயன் ஏதும் ஏற்படவில்லை. குறிப்பாக சம்பந்தன் போன்ற தமிழ்த் தலைவர்கள் கூட கொழும்பில் உயர்ந்த மாளிகைகளில் குடியிருந்த வண்ணம் சுகபோகங்களை அனுபவித்தும் தங்கள் உறவினர்களை வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பியும் சலுகளைகளை அனுபவித்தது மாத்திரமன்றி அவர்களும் இறக்கும் வரை மகிழ்ச்சியாகவே இருந்தார்கள். அத்துடன் காணா-மல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தங்களிடம் சந்திக்க வந்த போது அவர்களைப் புறக்கணித்தும் தென்னிலங்கை சிங்கள அரசியல்வாதிகளோடு நட்புக் கொண்டாடியும் அவர்களது காலம் கழிந்து சென்றது. சம்பந்தன் போன்றே மாவை சேனாதிராஜா- சுமந்திரன்- பார் முதலாளி சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்களும் செயற்பட்டார்கள். அவர்களைப் போன்றே அரசாங்கத்தில் தொடர்ச்சியாக அமைச்சர் பதவிகளை அலங்கரித்தும் அனுபவித்தும் வந்த டக்ளஸ் போன்றவர்கள் கூட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கண்ணீரின் கொடுமைகளை உணர்ந்து கொள்ள முன்வரவும் இல்லை.

இவ்வாறு துன்பத்தின் உச்சத்திற்குச் சென்று இன்னும் வலிகளோடு போராட்டங்களை நடத்திக் கொண்ட வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறைகளில் நம்பிக்கை இழந்துள்ள நிலையில்,
சர்வதேச நீதிப் பொறிமுறையின் அவசியத்தை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுசெல்வதற்காக அடுத்த முயற்சியாக யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்படடவர்களின் தினமாகக் குறிப்பிடப்படும் ஆகஸ்ட் 30ம் திகதி யாழ்ப்பாணத்தில் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளனர். இதற்காக வடக்கு கிழக்கு பகுதிகளின் ஆரம்பக் கூடடங்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன.
விசாரணைக்காகவும், பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்படுவதாகவும் கூறி அரச அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் இலங்கை அரசு இதுவரை உரிய பொறுப்புக்கூறலை முன்னெடுக்கத் தவறியுள்ளது. இதனாலேயே தாம் சர்வதேச நீதியை வலியுறுத்தி வருவதாக மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவி திருமதி அ. அமலநாயகி தெரிவித்தார். அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆலோசனைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தமது உறவுகளைத் தேடி நீண்டகாலமாகப் போராடி வந்தவர்களில் 600க்கும் மேற்பட்டோர் இதுவரை உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.
அவர்களின் போராட்டங்களும், சாட்சியங்களும் எதிர்கால சந்ததியினருக்கும் சர்வதேச சமூகத்திற்கும் சென்றடையும் வகையில், உயிரிழந்த உறவுகளின் சாட்சியங்களைப் பதிவு செய்து நூல் வடிவில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.
அத்துடன், "அழிக்கப்பட்ட சாட்சியங்கள்" என்ற தலைப்பிலான நூல் ஒன்றையும், இதுவரை தமது போராட்டங்களின் ஊடாக முன்வைக்கப்பட்ட அறிக்கைகளைத் தொகுத்து மற்றுமொரு நூலாகவும் வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.
எதிர்வரும் சர்வதேச மாநாட்டில் பல்வேறு முக்கிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இதில் சிறப்புரைகள், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை உள்ளடக்கிய கண்காட்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுடன் பேரணிகளும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பல ஆண்டுகளாக எதிர்கொண்டுவரும் வலிகளையும், அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைக்கும் முக்கிய தளமாக இம்மாநாடு அமைய வேண்டும் எனவும் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.
இம்மாநாட்டில் அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த பொதுமக்கள்,
அரசியல் பிரதிநிதிகள், மதகுருமார்கள், சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பங்கேற்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் நீதிக்கான போராட்டத்திற்கு வலுச்சேர்க்குமாறு ஏற்பாட்டாளர்கள் அன்புடன் அழைப்பு விடுத்துள்ளனர்.
"நடைபெற்ற அநீதிக்கு சர்வதேச நீதி வேண்டும்" என்ற கோரிக்கையை வலுப்படுத்தும் வகையில், எதிர்வரும் ஆகஸ்ட் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள சர்வதேச மாநாட்டில் அனைவரும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.
எனவே வடக்கு மற்றும் கிழக்கு அத்துடன் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள மக்கள் அமைப்புக்கள் ஆகியனவும் மேற்படி மாநாடு வெற்றி பெற தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும் என எமது உதயன் ஆசிரியபீடம் அழைக்கின்றது!

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 | Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers
- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

Room for Rent
McCowan & 401 அருகில், Luxury 2 Bed, 2 Bath Condo ல் ஒரு தனி அறை with separate bathroom, Aug 1, 2026 முதல் வாடகைக்கு உள்ளது. Share the kitchen & living area with a Tamil senior male. Gym, Swimming pools, Tennis, BBQ area, and more. Preference given to single Tamil male. Contact. 647 273 2053

வேலை வாய்ப்பு
தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்வதற்கு பெண்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 647-669-2739

Line Cook wanted for an Italian Restaurant
Toronto நகரில் Church வீதி / Wellesley வீதி சந்திப்புக்கு அருகில் உள்ள இத்தாலிய உணவகம் ஒன்றிக்கும் உடனடியாக Line Cook ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு Kumar 416 409 9450 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

இளவயது ஆண் ஒருவரைப் பராமரிக்க உதவியாளர் தேவை
சிறப்புத் தேவைகள் (SPECIAL NEEDS) கொண்ட 26 வயதுடைய ஆண் ஒருவரைப் பராமரிக்கவும் கவனித்துக்கொள்ளவும் ஆண் ஒருவர் தேவை. அவருடன் வீட்டிலேயே தங்கியிருந்து தினசரித் தேவைகளுக்கு உதவி செய்து அன்புடனும் பொறுமையுடனும் கவனித்துக் கொள்ளக் கூடிய ஒருவரையே நாம் எதிர்பார்க்கின்றோம். தகுதியும் அனுபவமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் நல்ல சம்பளமும் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் 416.892.3249 என்னும் தொலைபேசி இலக்கத்தில் அழைக்கவும். அழைப்பு கிட்டாவிட்டால் தங்கள் தொலைபேசி இலக்கத்தைப் பதிவு செய்தால் உதவியாக இருக்கும்.



# இராணுவத்திடமிருந்து காணிகளை மீட்க சர்வதேச சமூகத்தினர் தலையிட வேண்டும்

இலங்கை செய்திகள் Sri Lanka News

## தமிழரசு கட்சி எம்.பி. சிறீதரன் கோரிக்கை

- ந.லோகதயாளன்

ஈழத் தமிழர்களின் பூர்வீக நிலங்களைச் சிங்கள மயமாக்கும் நடவடிக்கைகளில் இராணுவம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றம் சாட்டினார்.

யாழ்.பலாலி பகுதியில் இராணுவத்தால் தொடர்ந்து கையகப்படுத்தப்பட்டுவரும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை உடனடியாக விடுவிக்கக் கோரி இடம்பெறும் போராட்டத்தில் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "இலங்கை இராணுவம் தமிழ் மக்களின் காணிகளைத் தொடர்ந்து அபகரித்துவரும் நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறும் நோக்கில் அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபடும் பொதுமக்கள் மீது புலனாய்வுத் துறையினரும் இராணுவத்தினரும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களை விடுத்து வருவதுடன், அவர்களைப் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்து விசாரணை நடத்துவதோடு வழக்குத் தொடரும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் சுதந்திரமாகப் போராட முடியாதவாறு பந்தல் அமைக்கக்கூட அனுமதி மறுக்கப்பட்டு, மிகுந்த வெயிலில் நிற்கும் அவல நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த 36 வருடங்களாகத் சொந்த வீடுகளில் வாழ முடியாமல், இராணுவத்தால் வீடுகளும் வழிபாட்டுத் தலங்களும் அழிக்கப்பட்ட நிலையில் மக்கள் பெரும் துயரங்களைச் சந்தித்து வருகின்றனர்.

போர் முடிந்து பல ஆண்டுகள் கடந்த நிலையிலும், இராணுவ முகாம்களுக்கு அருகில் சிங்களக் குடும்பங்கள் தொடர்ச்சியாகக் குடியேற்றப்பட்டு வருகின்றன. இது தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களைப் பறித்துச் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கும் முழுமையான முயற்சியாகும்.

இலங்கை அரசும் ஜனாதிபதியும் காணிகளை விடுவிக்கப் போவதாகத் தெரிவித்தாலும், களத்தில் நிலைமை முற்றிலும் மாறாகவே உள்ளது.

எனவே, சர்வதேச சமூகமும் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை இராணுவத்திடமிருந்து மீட்டுத் தருவதற்கு உடனடியாகத் தலையிட வேண்டும்.

தமிழ் மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படும் வரை பலாலி, வசாவிளான் மற்றும் மயிலிட்டி ஆகிய பகுதிகளில் மக்களின் இந்த நியாயமான போராட்டம் தொடரும்." - என்று அவர் மேலும் உறுதியுடன் தெரிவித்தார்.

# "செம்மணியை பார்வையிடுவதற்கான அனுமதி எங்களுக்குக் கிடைக்கவில்லை என்பது எங்களுக்குத் தெரிந்திருந்தும் வாகனத்தை சற்று நிறுத்தி அங்கு சென்றோம்"

## யாழ்ப்பாணத்தில் தனது அனுபவத்தை ஊடகவியலாளர்களிடம் வெளியிட்ட இலங்கைக்கான கனடியத் தூதுவர்

செம்மணி மனித புதைகுழி பகுதிக்குச் சென்று பார்க்க வாய்ப்பு கிடைக்காத ஒரே காரணத்தினால் மட்டுமே நாங்கள் எமது வாகனத்தை அங்கே நிறுத்தினோம். என்றாவது ஒரு நாள் அந்த இடத்தைப் பார்வையிட முடியும் என நம்புகிறேன் என இலங்கைக்கான கனடா தூதுவர் இஷேபிள் மார்ட்டின் தெரிவித்தார்.

செம்மணி மனித புதைகுழியை பார்வையிட இலங்கைக்கான கனடா நாட்டின் தூதுவரின் குழுவிற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்காமையால் கனடிய தூதுவரின் குழு செம்மணி பகுதிக்கு விஜயம் செய்து திரும்பிச் சென்ற சம்பவமொன்று இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே கனடா நாட்டின் தூதுவர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், "நான் யாழ்ப்பாணத்திற்கு வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். அந்தப் பயணம் மிகத் தெளிவாகத் திட்டமிடப்பட்ட ஒன்றாகும்.

நான் இதற்கு முன் செம்மணி பகுதிக்குச் சென்றதே இல்லை என்பதால், வழியில் அங்கே சற்று நிற்கலாம் என முடிவு செய்தேன். மேலும், இந்த பருவக்காலத்திற்குப் பிறகு அந்த இடம் மூடப்படப் போகிறது என்பதையும் நான் அறிந்திருந்தேன். எனவே, அங்கு என்னதான் இருக்கிறது என்று பார்ப்பதற்காகவே நாங்கள் சற்று நின்றோம்.



பார்வையிடுவதற்கான அனுமதி எங்களுக்குக் கிடைக்கவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். ஆனாலும், இதற்கு முன் அந்த இடத்திற்குச் சென்று பார்க்க வாய்ப்பு கிடைக்காத ஒரே காரணத்தினால் மட்டுமே நாங்கள் அங்கே நிறுத்தினோம்.

என்றாவது ஒரு நாள் அந்த இடத்தைப் பார்வையிட முடியும் என நம்புகிறேன், ஆனால் அது சாத்தியப்படவில்லை. நாங்கள் இந்த வாரத்தில் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்திற்காக தான் வந்துகொண்டிருந்தோம். அந்த இடத்தைப் பார்ப்பது எனக்கு முக்கியமாக இருந்தது. அங்கிருந்தவர்களைச் சந்தித்துச் சிறிய தகவல்களைப் பெற்றுக்கொண்டோம். பின்னர் அங்கிருந்து சென்றுவிட்டோம் - என்றார்.

# கொழும்பு போர்ட் சிட்டியில் சீன நபர் கடத்திக் கொலை தொடர்பாக 3 சீனர்கள் தேடப்படுகின்றனர்

கொழும்பு போர்ட் சிட்டியில் நடந்த அதிர்ச்சிகரமான கொலைச் சம்பவம் தொடர்பாக இலங்கைக் காவல்துறை முக்கிய அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜூலை 23ஆம் தேதி, கொழும்பு போர்ட் சிட்டி பகுதியில் சீன நாட்டைச் சேர்ந்த ஒருவரை, மற்றொரு குழுவினர் கடத்திச் சென்று கொலை செய்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் மூன்று சீனப் பிரஜைகளை இலங்கைக் காவல்துறை தற்போது தீவிரமாகத் தேடி வருகிறது.

தேடப்படும் நபர்கள்: சென் ஹாங்பிங் (Chen Hongping)
லூ காவோ (Lu Gao)
ஷியாங் ஹுவாசெங் (Xiang Huacheng)

இவர்களின் பாஸ்போர்ட் விபரங்களையும் காவல்துறை வெளியிட்டுள்ளது.

மேலும், இந்த மூவரும் சுற்றுலா விசா மூலம் இலங்கைக்கு வந்தவர்கள் என்றும், அவர்களது விசா காலாவதியாகிவிட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால், சந்தேகநபர்கள் விமானம் மூலமாகவோ அல்லது கடல் மார்க்கமாகவோ இலங்கையை விட்டு வெளியேற முயற்சிக்கலாம் என காவல்துறை எச்சரித்துள்ளது.

மக்களிடம் காவல்துறையின் முக்கிய வேண்டுகோள்!

இந்த மூவரைப் பற்றிய தகவல் யாருக்காவது தெரிந்திருந்தால், அல்லது இவர்களை எங்காவது பார்த்திருந்தால், தாமதிக்காமல் கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகளை 071-8591735 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ளுமாறு காவல்துறை கேட்டுக்கொண்டுள்ளது.




இந்தக் கொலைக்கான காரணம் என்ன?

ஆரம்பகட்ட விசாரணைகளின்படி, இந்தக் கொலைக்குப் பின்னால் கணினி மோசடி தொடர்பான தகராறு காரணமாக இருந்திருக்கலாம் என காவல்துறை சந்தேகிக்கிறது.

அதாவது, கணினி மோசடி தொடர்பான பிரச்சினை ஒன்று ஏற்பட்டதாகவும், அந்தத் தகராறு பின்னர் கடத்தல் மற்றும் கொலை வரை சென்றிருக்கலாம் என்றும் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

முக்கிய எச்சரிக்கை:

சந்தேகநபர்கள் தொடர்பாக தகவல் தெரிந்தால், பொதுமக்கள் தாங்களாக அவர்களைப் பிடிக்க முயற்சிக்காமல், உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

கொழும்பு போர்ட் சிட்டியில் நடைபெற்ற இந்த அதிர்ச்சி சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# சோமரத்ன ராஜபக்ஷ காண்பிக்கும் இடங்களில் அகழ்வு செய்ய வேண்டும் என சிறீதரன் எம்.பி. வலியுறுத்துகின்றார்!



யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் அரசு இதயசுத்தியுடன் வெளிப்படையாகச் செயற்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த 21ம் திகதி வெள்ளிக்கிழமை உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "செம்மணி மனிதப் புதைகுழியின் மதிலைத் தாண்டிய பகுதிகளிலும் மனித எலும்புக்கூடுகள் இருப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுவதால், நீதிமன்ற உத்தரவுடன் சோமரத்ன ராஜபக்ஷவைச் செம்மணிக்கு அழைத்துச் சென்று அவர் காண்பிக்கும் இடங்களில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

செம்மணி மனிதப் புதைகுழியில் முதற்கட்டமாக 9 நாள்களும், இரண்டாம் கட்டமாக 45 நாள்களும், மூன்றாம் கட்டமாக 56 நாள்களும் என மொத்தம் 110 நாள்களாக அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய 584 மனித எலும்புக்கூடுகளும், 170 பிற சான்றுப்பொருள்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

செம்மணிப் பகுதிக்குப் பார்வையிட ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவுக்கு அரசு அனுமதியளித்த போதிலும், கனடா உயர்ஸ்தானிகருக்கும் அவரது குழுவினருக்கும், ஆஸ்திரேலியா நாட்டுக்கும் அனுமதி மறுக்கப்பட்டமை பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அகழ்வுப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க அரசிடம் நிதி இல்லையாயின், இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் கலந்துரையாடி நிதி கோருவதோடு, தென்னாபிரிக்கா மற்றும் ஜப்பான் நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்று உண்மையை வெளிக்கொண்டுவர வேண்டும்." - என்றார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இறுதி யுத்தத்தில் உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு கிளிநொச்சி சென்று உதவித்தொகை வழங்கிய நீதி அமைச்சர்

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்கும் நிகழ்வு கிளிநொச்சியில் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்றது.

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் ஏற்பாட்டில், 2009ஆம் ஆண்டு யுத்த காலப்பகுதியில் இரண்டு பிள்ளைகளை இழந்த பெற்றோருக்கான உதவித்தொகை வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி, இரணைமடு, கனகாம்பிகைகுளம் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்ற நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, குடும்பத்தினருடன் கலந்துரையாடி அவர்களின் தற்போதைய நிலைமைகளைக் கேட்டறிந்ததுடன், உதவித்தொகைக்கான காசோலைகளையும் வழங்கி வைத்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தற்போதைய அரசு மிகவும் கர-ிசனையுடன் செயற்பட்டு வருகின்றது என்றும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து வழிகளிலும் உதவுவதற்கு அரசு தயாராக இருக்கின்றது என்றும் நீதி அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.



இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன், "கிளீன் ஸ்ரீலங்கா" வேலைத்திட்ட இணைப்பாளர் மருங்கன் மோகன் மற்றும் கிளிநொச்சி அபிவிருத்திக் குழு இணைப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரச நிகழ்வைக் கண்டித்து பாதிக்கப்பட்ட மக்கள் நடத்திய போராட்டம்!

## பொலிஸார் குவிக்கப்பட்டு அரங்கேற்றப்பட்ட அராஜகம்



**- ந.லோகதயாளன்**

காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் (ஓ.எம்.பி.) ஏமாற்று நாடகம் இனியும் வேண்டாம் எனவும், இராணுவத்தினரின் கையில் ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது? எனக் கோரியும் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் 25ம் திகதி அன்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச காணாமல்போனோர் தினத்தை முன்னிட்டு, யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற நிகழ்வைக் கண்டித்தே, வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலகம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உள்நாட்டு பொறிமுறையை வலுப்படுத்தும் காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் இழப்பீடும் வேண்டாம், மரண சான்றிதழும் வேண்டாம் என்பதை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் அராஜகங்களைப் புரிந்தனர். எனினும், அவர்கள் சளைக்காமல் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இதேவேளை, சர்வதேச காணாமல் போனோர் தினத்தை முன்னிட்டு, வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 30ஆம் திகதி சர்வதேச மாநாடொன்றும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வவுனியாப் பல்கலைக் கழகத்திற்கான புதிய மாணவர் விடுதி!

## அடிக்கல் நாட்டினார் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய



நாடு தழுவிய ரீதியில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான விடுதி வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள 55 புதிய மாணவர் விடுதித் திட்டங்களின் கீழ், முதலாவது விடுதியாக வவுனியாப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படவுள்ள புதிய நான்கு மாடி விடுதிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா இன்று நடைபெற்றது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் விசேட விருந்தினராகக் கலந்துகொண்டார்.

வவுனியாப் பல்கலைக்கழக வளாகத்தில் (பம்பைமடு) நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர்கள், பல்கலைக்கழக வேந்தர், துணைவேந்தர், கல்விப் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, "நாங்கள் கல்வியில் முதலீடு செய்யும்போது, கல்வித் தரத்தில் மட்டுமன்றி ஒரு சிறந்த பல்கலைக்கழகத்தின் முக்கிய பண்புகளில் ஒன்றாக மாணவர் மற்றும் பணியாளர்களின் நலனும் அமைய வேண்டும் என்பதே எமது அரசின் கொள்கையாகும்.



எமது இந்த அரசு பொறுப்பேற்ற போது தேசிய பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் தங்குமிட வசதி, சிற்றுண்டிச்சாலைகள் போன்ற போதிய வசதிகளின்மையால் பல பிரச்சினைகளை எதிர்கொள்வது தெளிவாகத் தெரிந்தது.

இந்தப் பின்னணியில்தான், 2026ஆம் ஆண்டில் முழு பல்கலைக்கழகக் கட்டமைப்புக்கும் ஒரு விடுதித் திட்டத்தை எம்மால் ஆரம்பிக்க முடிந்தது. இத்திட்டத்தின்கீழ் கொழும்புக்கு வெளியேயுள்ள, குறிப்பாக மாணவர்களுக்கு மாற்று வழிகள் குறைவாகக் காணப்படும் மற்றும் நகரத்துக்குத் தூரமாக அமைந்துள்ள புதிய பல்கலைக்கழகங்களுக்கு நாம் முன்னுரிமை அளித்துள்ளோம். இதனாலேயே வடக்கு மாகாணத்தில் உள்ள வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகங்களுக்கு விசேட கவனமும் முன்னுரிமையும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த 55 விடுதித் திட்டங்கள் மூலம் சுமார் 16 ஆயிரம் இளங்கலை மாணவர்களின் வாழ்க்கை தரம் மேம்படும். வவுனியாப் பல்கலைக்கழகத்துக்கான நான்கு புதிய விடுதித் திட்டங்களில், 400 மாணவர்களுக்கான இரண்டு விடுதிகளும், 200 மாணவர்களுக்கான மேலும் இரண்டு விடுதிகளும் அடங்கும். இதன் மூலம் மாணவர்கள் தங்குமிடப் பிரச்சினை இன்றி நிம்மதியாகக் கல்வி கற்கும் சூழல் உருவாக்கப்படும்.

பல்கலைக்கழகம் என்பது கட்டடங்கள் மாத்திரமல்ல, சிறந்த எதிர்காலத் தலைவர்களை உருவாக்குவதற்கான கலாசாரமும் அங்கு இருக்க வேண்டும். பல்கலைக்கழகங்களில் பகிடிவதைக்கு எவ்வித அனுமதியும் இல்லை என்பதை வலியுறுத்துகின்ற அதேவேளை, மாணவர்களின் ஏனைய ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு எமது அரசாங்கத்தின் ஆதரவு எப்போதும் இருக்கும்" என்று தெரிவித்தார்.

இலங்கை அரசின் முழுமையான நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த 200 மாணவர் கொள்ளளவு கொண்ட நான்கு மாடி விடுதிக் கட்டடமானது, வவுனியாப் பல்கலைக்கழக மாணவர்களின் நீண்டகாலத் தங்குமிடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வவுனியாப் பல்கலைக்கழகம் தனது விடுதித் திட்டத்துக்கான ஏலப்பத்திரம் கோருதல் மற்றும் கொள்முதல் நடவடிக்கைகளைத் துரிதமாக நிறைவு செய்ததன் பலனாகவே இந்த மாபெரும் திட்டத்தின் முதலாவது கட்டடப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# செந்தில் குமரன் நிவாரண நிதியத்தினால் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்கு இரண்டு இரத்தச் சுத்திகரிப்பு இயந்திரங்கள்!




கனடா கந்தசுவாமி கோவில் பக்தர்களின் அன்பளிப்பில் கனடா செந்தில் குமரன் நிவாரண நிதியத்தின் மூலம் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்கு இரண்டு இரத்தச் சுத்திகரிப்பு (Dialysis) இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டார்.

நிகழ்வில், உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், "போரினால் பாதிக்கப்பட்ட எங்கள் மண், இழப்புகளிலிருந்து மெல்ல மெல்ல மீண்டெழுந்து வரும் இந்தச் சூழலில், மக்களின் உயிரைக் காக்கும் இத்தகைய உயரிய உதவி என்பது நெஞ்சார நினைவுகூர்ந்து போற்றத்தக்கது. சிறுநீரக நோயாளிகளின் அவசியத் தேவையை உணர்ந்து, வடமாகாண மருத்துவமனைகளின் மேம்பாட்டிற்காக இரத்தச் சுத்திகரிப்பு (Dialysis) இயந்திரங்களை வழங்கி பேராதரவு தந்த செந்தில்குமரன் அவர்களுக்கும், இதற்கு உறுதுணையாக நின்ற அனைவருக்கும் மக்கள் சார்பில் என் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்தார்.

கனடா கந்தசுவாமி கோவில் பக்தர்களின் அன்பளிப்பில், செந்தில் குமரன் நிவாரண நிதியத்தின் மூலம் வட மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை (Kilinochchi DGH), மருத்துவமனைக்கு 2 இரத்தச் சுத்திகரிப்பு (Dialysis) இயந்திரங்கள் வழங்கி வைக்கும் வகையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி திருமதி தயாளினி மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் இசபெல் மார்ட்டின் (Isabelle Martin) கலந்துகொண்டார்.

மேலும், இந்நிகழ்வில் "செந்தில் குமரன் நிவாரண நிதியத்தின்" நிறுவனர் செந்தில்குமரன், கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சேரலாதன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் சட்டத்தரணி சுப்பிரமணியம் சுரேன், கிளிநொச்சி நகர வர்த்தக சங்கத் தலைவர் இளையதம்பி விஜயசிங்கம், இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகராலய அரசியல் அலுவலர் சாகித்தியனன், கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர்களான கௌரவ சிவமோகன், கௌரவ ஆனந்தவடிவேல், கௌரவ எழில்வேந்தன், மாவட்ட பொது மருத்துவமனையின் வைத்தியர்கள், தாதியர்கள், பணியாளர்கள் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டனர்.



# இலங்கையில் வடக்கு மாகாணமே ஆரம்பக் கல்வியை கட்டமைத்த ஒன்றாகும் என புகழாரம் சூட்டிய முன்னாள் பிரதம செயலாளர் இளங்கோவன்!



வடக்கு மாகாணமே ஆரம்பக் கல்வியை கட்டமைத்த ஒரு பிரதேசம் ஆகும் என முன்னாள் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன் புகழாரம் சூட்டியுள்ளார்!

சிறுவர்களின் கல்வி வளர்ச்சியில் வடக்கு மாகணமே ஆரம்ப கல்வியை கட்டமைத்த முதன்மை பெற்ற மாகாணமாக விளங்குகிறது என முன்னாள் வடமாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன் தெரிவித்தார்.

ஆகஸ்ட் 26ம் திகதி அன்று புதன்கிழமை யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் முன்னாள் வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம் பிள்ளை எழுதிய இரு நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு தலையை உரையை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நூலாசிரியர் தணிகாசலம் பிள்ளை எங்களுடைய ஆசான் இந்தக் கல்லூரியின் மைந்தன் 15 நூல்களை எழுதி இருக்கிறார் இரு நூல்களை வெளியிட்டு இருக்கிறார்.

எமது வடக்கு கல்விப் புலமானது கல்வியால் உயர்ந்த ஒரு சமுதாயத்தை கட்டி எழுப்ப வேண்டும் என்ற தூர நோக்கோடு செயல்பட்டுக் கொண்டிருப்பதால் இவ்வாறான நூல் வெளியீடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

குறிப்பாக ஆரம்ப பிரிவு கல்வியை கட்டமைத்த ஒரு மாகாணமாக வடமாகாணமே முதன்மை வருகின்ற நிலையில் அதற்கு அமரர் டிவகலாவின் பங்கு காத்திரமானது.

நூல் ஆசிரியர் தணிகாசலம் பிள்ளை சிறந்த கல்விமான் தனது தள்ளாடும் வயதிலும் கல்விக்கும் சமூகத்திற்கும் பல்வேறு சேவையை ஆற்றி வருகிறார்.

ஆகவே வடக்கு மாகாணம் கல்வியில் சிறந்து விளங்குவதற்கு இவ்வாறான பல நூல்கள் வெளிவர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# "கனடாவில் தொல்காப்பியத்தையும் தொல்காப்பியரையும் கற்றறிந்த ஒரு இளைய தலைமுறை ஒன்று நிச்சயம் உருவாகும்"

கனடிய செய்திகள் Canadian News

## கனடாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள "2வது தொல்காப்பிய மாநாடு" தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் மன்றத்தின் முன்னாள் தலைவர் த. சிவபாலு தெரிவிப்பு
















"தொல்காப்பியம் என்ற நூலை 2000 ஆண்டுகளுக்கு முன்னர் எமக்காகப் படைக்கப்பெற்ற ஒரு நூலாகும். அது எமது மொழியின் இலக்கணம் பற்றியும் நாகரிகம் பற்றியும் உள்ளடக்கத்தை கொண்டது மாத்திரமல்ல. எமது தமிழ் மக்களின் வாழ்வியலை இறுகப் பற்றிக் கொண்ட ஒரு "வேர்" ஆகும்.

கனடாவில் தொல்காப்பிய மன்றம் நிறுவுப்பெற்றதற்கு பின்னர் அந்த நூல் பற்றிய தேடல் பலரிடத்தில் உருவாகியிருப்பது மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தரும் ஒரு செய்தியாகும். எம் மத்தியில் மாணவர்கள் மத்தியிலும் "தொல்காப்பியம்" பற்றிய புரிதலை ஏற்படுத்த "மாணவர் பாசறை" ஒன்று கனடாவில் ஆரம்பிக்கப்பெற்று அது நல்ல பலனைத் தந்து கொண்டிருக்கின்றது. எனவே எனது பார்வையில் "இனிவரும் காலங்களில் கனடாவில் தொல்காப்பியத்தையும் தொல்காப்பியரையும் பற்றிய அறிவைப் பெற்ற இளைய தலைமுறை ஒன்று நிச்சயம் உருவாகும்" என்பதை நான் இந்த இந்த இடத்தில் மிகுந்த நம்பிக்கையுடன் பதிவு செய்கின்றேன்".

இவ்வாறு 24-08-20226 அன்று ஸ்காபுறோ JCS Banquet Services மண்டபத்தில் நடைபெற்ற தொல்காப்பிய மன்றக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய மன்றத்தின் முன்னாள் தலைவர் தங்கராசா சிவபாலு தெரிவித்தார்.

கனடாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள "2வது தொல்காப்பிய மாநாடு" தொடர்பான மேற்படி ஆலோசனைக் கூட்டத்திற்கு மன்றத்தின் தற்போதைய தலைவர் முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ் அவர்கள் தலைமை தாங்கினார். பேராசரியர் இல.சுந்தரம் அவர்கள் கலந்துரையாடலை தொகுத்து வழங்கினார்.

கனடாவில் அடுத்த மாதம் செப்படம்பர் 19ம் 20ம் திகதிகளில் நடைபெறவுள்ள "2வது தொல்காப்பிய மாநாடு" தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் ஊடக நிறுவனங்களின் பிரதம ஆசியர்கள் மற்றும் ஒலி-ஒளி ஊடகங்கள் சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் நிறுவனர்கள் உட்பட தமிழ் ஆர்வலர்கள் மற்றும் கல்வியாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் தமிழாசிரியர்கள், மாணவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

மேற்படி கலந்துரையாடலில் பல பயனுள்ள கருத்துக்கள் உரையாற்றிய அனைவராலும் பகிரப்பெற்றன.

முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ் அவர்கள் உரையாற்றும் போது கனடாவில் தொல்காப்பியம் பற்றிய புரிதலையும் அறிவையும் ஆர்வத்தையும் தோற்றுவிக்க எமது மன்றம் கடந்த பல வருடங்களாக இயங்கிவருகின்றது என்றும் அதனை மக்கள் மயப்படுத்துவதே எமது பிரதான நோக்கம் என்றும் குறிப்பிட்டார்.

அன்றைய நிகழ்வின் பிரதான மேசையில் திருவாளர்கள் பாவலர் சண்முகராஜா, வைத்தியர் ரகுமாறன், திருமதி மன்றத்தின் செயலாளர் கலா அரியராசா, மன்றத்தின் நிறுவனர்களில் ஒருவரான திரு சுகந்தன் வல்லிபுரம் ஆகியோரும் உடனிருந்தனர்.

மேற்படி கலந்துரையாடல் பயனுள்ள ஒன்றாக அமைந்தது என அங்கு கலந்து கொண்ட அனைவரும் கருத்துக்களைப் பகிர்ந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

அன்றை நிகழ்ச்சிக்கு தனது மண்டபத்தை இலவசமாக வழங்கிய JCS Banquet Servicநளயூட் அவர்களுக்கு மன்றத்தின் சார்பிலும் சபையோர் சார்பிலும் நன்றியும் தெரிவிக்கப்பெற்றது.

- ***சத்தியன்***





# நீதிக்குப் பதில் நிவாரணமா?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

“சர்வதேச விசாரணைகளை ஏற்றுக் கொள்ளாத ஒரு நாடு சர்வதேச நாட்களை எப்படி அனு‘டிக்கலாம்?” இவ்வாறு கூறியிருப்பவர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அமைப்பின் சார்பாக பேசிய ஒரு பெண். அங்குள்ள ஊடகங்கள் மத்தியில் பேசும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அவ்வாறு தெரிவிப்பதற்கு காரணம், கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் கச்சேரியில் நடந்த சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர் நினைவு நாளாகும். அந்த நாள் சர்வதேச ரீதியாக இந்த மாதம் 30 ஆம் திகதிதான் அனு‘டிக்கப்படுகிறது. எனினும் இலங்கை அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் ஆகிய ஓஎம்பி (OMP) அதனை கடந்த செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அனுஷ்டித்தது. அதற்கு எதிராக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்புகளைச் சேர்ந்த அம்மாக்கள் யாழ் மாவட்டச் செயலக சூழலுக்குள் நின்று எதிர்ப்பு காட்டினார்கள். அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அம்மாக்களை போலீசார் பலத்தைப் பிரயோகித்து அங்கிருந்து அகற்றினார்கள். ஏற்கனவே உடலாலும் மனதாலும் நொந்துபோன பெண்களை பலத்தைப் பிரயோகித்து அகற்றியிருக்கிறார்கள். இது நடந்தபோது நீதி அமைச்சர் கச்சேரிக்கு உள்ளே காணப்பட்டார். கச்சேரிக்கு வெளியே நடப்பவற்றை அவர் கைபேசியில் நேரலையில் பார்த்ததாக ஒரு தகவல்.

அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் என்று அழைக்கப்படுகின்ற ஓஎம்பியை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்புகள் ஏற்றுக்கொள்ளவில்லை. முதலாவதாக அந்த பெயரே ஒரு பிரச்சினை. யாரும் தாமாகக் காணாமல் போகவில்லை. அல்லது தாமாகத் தொலைந்து போகவில்லை. அவர்கள் அரசியல் காரணங்களுக்காக காணாமல் ஆக்கப்பட்டார்கள். கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்கள். யார் என்று தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்கள். அல்லது சரணடையக் கொடுத்தவர்கள், சரணடைந்தவர்கள் காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இங்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்பதுதான் பொருத்தமான வார்த்தை. அந்த வார்த்தையிலேயே அரசியல் இருக்கிறது.

இந்த இடத்தில் மற்றொரு வார்த்தை அரசியலை - அதுவும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களோடு தொடர்புடையது - இங்கே ஞாபகப்படுத்தலாம். இது நடந்தது 2020க்கு முன்பு. நிலைமாறு கால நீதியின் கீழ் கிழக்கில் நடந்த ஒரு கருத்தரங்கில் பாண்டிருப்பைச் சேர்ந்த முதிய அம்மாக்கள் கொஞ்சம் பேர் வந்திருந்தார்கள். நீங்கள் எந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று கேட்டபோது அவர்கள் தாங்கள் பாண்டிருப்பு விதவையர் சங்கம் என்று சொன்னார்கள். தமது அமைப்புக்கு அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சங்கம் என்று பெயர் வைக்கவில்லை. பாண்டிருப்புக் கிராமம் அங்குள்ள திரௌபதி அம்மன் கோவிலுக்காகப் பெயர் பெற்றது. அந்தக் கிராமத்தைச் சேர்ந்த அந்த முதிய அம்மாக்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காக உருவாக்கிய அமைப்புக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்பு என்றுகூட பெயர் வைக்க முடியாத ஒரு பாதுகாப்பு பற்ற சூழலில் காணப்பட்டார்கள். அதாவது ஒரு அமைப்புக்கு வைக்கப்படும் பெயரே பிரச்சினையாக வரலாம் என்று பயம். இப்படித்தான் இருக்கிறது தமது உறவுகளைப் பறிகொடுத்த அம்மாக்களின் துயரம். இவ்வாறு தமது சங்கத்துக்கு பெயர் வைக்கும் விடயத்தில் கூட தற்காப்பு உணர்வோடு செயல்பட வேண்டியிருக்கும் ஒரு நாட்டில், ஐநாவில் ஒப்புக்கொண்ட பிரகாரம் நிலைமாறு கால நீதிச் செய்முறைகளின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்பிற்கு அதை உருவாக்கிய காலத்தில் இருந்த ரணில்-மைத்திரி அரசாங்கம் ”காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம்” என்று பெயர் வைத்தது தற்செயலானது அல்ல.

இப்படியாக அமைப்பின் பெயரில் தொடங்கி, அந்த அமைப்பின் செயற்பாடுகளின் மீதும் அம்மாக்களுக்கு அவநம்பிக்கை உண்டு. அந்த அமைப்பு சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தினத்தை யாழ்ப்பாணம் கச்சேரியில் அனுஷ்டித்தபோது அம்மாக்கள் அதற்கு எதிர்ப்புக் காட்டினார்கள்.

வழமையாக கொழும்பில் நடக்கும் அந்த நிகழ்வை இம்முறை யாழ்ப்பாணத்தில் அமைச்சர்கள் சகிதம் அனுஷ்டிப்பது என்றும், அதையும் அதற்குரிய சர்வதேச நாளில் செய்யாமல் ஐந்து நாட்கள் முன்னதாக அதைச் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்ட மக்களை குறிப்பாக நிவாரணம் வழங்கும் நிகழ்வின் பங்காளிகளாக மாற்ற வேண்டும் என்றும் நன்கு திட்டமிட்டு அந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் அம்மாக்களின் அமைப்புகள் சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நாளை 30 ஆம் திகதி அனு‘டிப்பதற்கு ஏற்பாடுகளை செய்து வரும் ஒரு பின்னணியில், அந்த நாளை தவிர்த்து ஐந்து நாட்கள் முன்னதாக மேற்படி நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டதா?

இந்த நிகழ்ச்சி தொடர்பாக நடந்த ஓர் ஊடகச் சந்திப்பில்தான் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பெண் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதாவது சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொள்ளாத ஒரு நாடு சர்வதேச தினங்களை எப்படிக் கொண்டாடலாம் என்ற கேள்வி.

இது மிக ஆழமான ஒரு கேள்வி. இலங்கைத் தீவின் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் இன அழிப்பு வெளியுறவுக் கொள்கையை வெளிப்படுத்தும் ஒரு கேள்வி. போரை வெல்வதற்கு அவர்களுக்குச் சர்வதேசம் தேவை. தமிழ் மக்களைத் தனிமைப்படுத்துவதற்கு அல்லது தமிழ் மக்கள் மத்தியில் இருந்து போராட்டத்தைத் தனிமைப்படுத்துவதற்கு அவர்களுக்கு சர்வதேசம் தேவை. ஆனால் சமாதானத்திற்கு அவர்களுக்குச் சர்வதேசம் தேவையில்லை. அதாவது பொறுப்புக்கூறும் விடயத்தில் சர்வதேச விசாரணையை, தலையீட்டை அவர்கள் ஏற்கவில்லை.

இது அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையில் உள்ள ஓர் அக முரண்பாடாகத் தோன்றலாம். இல்லை. அது அக முரண்பாடு அல்ல. அது மிகத் தெளிவான ஓர் இன அழிப்பு அரசியல். தமிழ் மக்களை அழிப்பதற்கு அவர்களுக்கு சர்வதேசம் தேவை. ஆனால் தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு அவர்களுக்குச் சர்வதேசம் தேவையில்லை. தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அவர்களுக்கு சர்வதேசம் தேவையில்லை. எங்கே சர்வதேசத்தை உள்ளே விட வேண்டும், எங்கே சர்வதேசத்தை எல்லையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் அவர்களிடம் மிகத்தெளிவான தெரிவுகள் உண்டு.அது முழுக்க முழுக்க இன ரீதியிலான ஒரு தெரிவு.

இப்பொழுது வழிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்திலும் அரசாங்கம் சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் சர்வதேச தினத்தை கொண்டாடுகிறது. ஏன் கொண்டாடுகிறது? ஏனென்றால் சர்வதேச ரீதியாக ஓஎம்பியின் நம்பகத்தன்மையை பலப்படுத்துவதே அவர்களுடைய நோக்கம். ஓஎம்பி அரசின் முழுமையான ஆதரவோடு முன்னேற்றகரமான விதத்தில் இயங்கிவருகிறது என்று வெளி உலகத்துக்குக் காட்ட வேண்டும். அதன்மூலம் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை உலக அளவில் பலப்படுத்த வேண்டும்.

கடந்த 25ஆம் திகதி, பிற்பகல், யாழ் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வானது அமைச்சுமட்ட அதிகாரப்பூர்வ நிகழ்வாகும். நிகழ்வில் அமைச்சர்களும் உட்பட யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் வட மாகாண ஆளுநரும் மாவட்டச் செயலர்களும் அரச உயர் அதிகாரிகளும் பங்கு பற்றியிருக்கிறார்கள். இந்த நிகழ்வில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் என்று கூறப்படுகின்ற சுமார் 352 குடும்பங்கள் கலந்து கொண்டதாக மாவட்டச் செயலகத்தின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மருத்துவ முகாம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நீரிழிவுப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. நீதி அமைச்சர் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களிடம் சென்று உதவித் தொகையை வழங்கியுள்ளார். பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஒரு பகுதியினர் தங்களோடு நிற்கிறார்கள், தங்களுடைய நிகழ்ச்சி நிரலை ஏற்றுக்கொள்கிறார்கள், என்று காட்ட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கும் ஓஎம்பிக்கும் உண்டு.

அதன்மூலம் அவர்கள் சர்வதேச விசாரணைப் பொறிமுறைக்கான கோரிக்கையை மழுங்கடிக்கலாம். நீதியா? நிவாரணமா? என்று கேள்வி வரும் பொழுது ஒரு சிறு தொகையினர் நிவாரணத்தின் பின் போகக்கூடிய வாய்ப்புகள் உண்டு. நிவாரணங்களின் பின் வருபவர்களைக் காட்டி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எல்லாருமே சர்வதேச விசாரணையை கேட்கவில்லை என்று கூற அரசாங்கம் முயற்சிக்கும். மேலும் ஓஎம்பியின் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் முழு அளவு உதவுவதன் மூலமும், செம்மணிப் புதைகுழியை அகழ்வாராட்சி செய்யத் தேவையான நிதியை தொடர்ந்து வழங்கி வருவதன் மூலமும், உள்நாட்டு விசாரணைப் பொறி முறையின் நம்பகத் தன்மையை உலக அளவில் பலப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது என்பது தெரிகிறது.

அந்த ஏற்பாடுகளைப் புறக்கணித்த, எதிர்த்த அம்மாக்கள் மாவட்டச் செயலகத்தின் வாசலில் நடத்திய போராட்டம் தொடர்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் மயூரப்பிரியன் பின்வருமாறு சமூக ஊடக வலைத்தளத்தில் எழுதியதை, இப்பொழுது அமைச்சர்களாக இருக்கும் முன்னாள் தோழர்கள் வாசித்திருப்பார்களா? ”மாவட்டச் செயலகத்தின் வாசலில் உள்ள பதாகையில் தமது பிரார்த்தனைத் துண்டுச் சீட்டுக்களை “பின்“பண்ணி வைத்திருந்தார்கள். அதில் எவனும்,தனக்கு மூக்கு கண்ணாடி தா,வீடு தா எனக் கேட்கவில்லை.” அந்த மண்டபத்தில் வைத்து ”பிள்ளைக்கு என்ன நடந்தது என்ற உண்மை தெரிய வேணுமா? வீட்டு திட்டம் வேணுமா?” எனக் கேட்டிருந்தால் மூஞ்சியில காறித் துப்பிட்டுப் போயிருப்பாங்க”



இலங்கை செய்திகள் Sri Lanka News

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் மேற்கொள்ளப்படுகின்ற மாநாட்டிற்கு ஜனநாயக போராளிகள் கட்சி பூரண ஆதரவு என்கிறார் சி.வேந்தன்!

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் மேற்கொள்ளப்படுகின்ற மாநாட்டிற்கு ஜனநாயக போராளிகள் கட்சி பூரண ஆதரவு வழங்கவுள்ளதாக அதன் தலைவர் சி.வேந்தன் தெரிவித்துள்ளார். அவர் வடமராட்சியில் தனது இல்லத்தில் நடாத்திய ஊடாக சந்திப்பின்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வலிந்து ஆகப்பட்டோர் உறவுகள் சங்கத்தினரால் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வாநாயகம் அரங்கில் மாபெரும் போராட்டம் ஒன்றினை நடாத்துவதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அவர்களால் அரசியல் கட்சிகள் பொது அமைப்புகள் நிறுவனங்களுக்கும் கலந்து கொள்வதற்கான அழைப்பும் ஆதரவுகோரியும் ஊடக சந்திப்பு ஒன்று நடாத்தப் பட்டிருக்கின்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவு நடாத்துகின்ற அந்தப் போராட்டத்திற்கு ஜனநாயக போராளிகள் கட்சி பூரண ஆதரவை வழங்குவதாக தீர்மானித்திருக்கிறோம்.

யுத்தம் முடிந்து 17 வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் காணாமல் ஆக்கப் பட்டிருக்கின்றார்கள். அதேபோல் பெற்றோர்களும் தங்களுடைய பிள்ளைகளை இராணுவத்தினரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.




பல பெண்கள் தங்களுடைய கணவர்களை இராணுவத்திடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக அந்த உறவுகள் 10 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறுபட்ட போராட்டங்களை நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஒரு வித்தியாசமான போராட்டத்தை முன்னெடுக்க விருக்கிறார்கள்.

அந்த போராட்டத்தில் அந்த மாநாட்டில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் இன்று சர்வதேசம் வரை கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது.

அவர்களுக்கு ஒரு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக எல்லோரும் வரவேண்டும். அதே போன்று ஜனநாயக போராளிகள் கட்சி ஆகிய நாங்களும் அவர்களுக்கு பூரண ஆதரவு வழங்கவே கலந்து கொள்ள இருக்கின்றோம் என்றார்.

# காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு மட்டும் உரித்தானதல்ல. நாட்டின் சகல பகுதிகளிலும் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.



## யாழ்ப்பாணத்தில் இலங்கை நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவிப்பு

- ந.லோகதயாளன்

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினை வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு மட்டும் உரித்தானதல்ல. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறான சம்பவங்களால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. என இலங்கையின் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அவர்கள் தெரிவித்தார்.

"வலிந்து காணாமலாக்கப்பட்டமையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினம்" காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஏற்பாட்டில் கடந்த 25ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று (25.08.2026) யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போது கருத்து தெரிவிக்கும்போதே நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று நாம் இங்கு ஒன்று கூடியிருப்பது ஒரு சாதாரண நிகழ்வை நடத்துவதற்காக அல்ல. ஏனெனில் பல ஆண்டுகளாகத் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிய முடியாமல், அவர்களின் வருகைக்காகக் காத்திருக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் துயரத்தையும் வேதனையையும் நினைவுகூர்வதற்காகவும், அவர்களுக்கு நீதி கிடைப்பதற்கான எமது உறுதியை வெளிப்படுத்துவதற்காகவுமே இந்த நிகழ்வு இடம்பெறுகிறது.

காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரின் பின்னால் ஒரு குடும்பத்தின் ஆழமான துயரம் உள்ளது. ஒரு தாய் தனது பிள்ளை திரும்பி வருவான் எனக் காத்திருக்கிறார். ஒரு மனைவி தனது கணவன் வருவார் என்ற நம்பிக்கையுடன் வாழ்கிறார். இவ்வாறு பல ஆண்டுகளாக பதிலற்ற கேள்விகளுடனும் முடிவில்லாத எதிர்பார்ப்புடனும் வாழும் குடும்பங்களின் வேதனையை அரசாங்கம் நன்கு புரிந்துகொண்டுள்ளதுடன் அவர்களது கவலையிலும் எதிர்பார்ப்பிலும் பங்காளியாக இருக்கிறது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினை வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு மட்டும் உரித்தானதல்ல. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறான சம்பவங்களால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிவது முழு நாட்டினதும் பொறுப்பாகும்.

"சட்டம் அனைவருக்கும் சமம் சட்டத்திற்கு மேலாக எவரும் இல்லை" என்பதே அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கையாகும். அந்த வகையில், காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் நீதியானதும் முறையானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்படும். இதன் ஊடாக உண்மைகள் கண்டறியப்பட்டு, குற்றம் உறுதிப்படுத்தப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த காலங்களில் நிதி மற்றும் ஆளணி பற்றாக்குறை காரணமாகத் தாமதமடைந்த விசாரணைகளை விரைவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேபோன்று, புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளும் அரசியல் நோக்கங்களின்றி, அறிவியல் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும். உண்மையில் என்ன நடந்தது என்பதை ஆதாரபூர்வமாகக் கண்டறிவதே எமது நோக்கமாகும். குறிப்பாக, செம்மணி புதைகுழி விசாரணைகளுக்காக இதுவரை சுமார் 57 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. உண்மையை கண்டறியும் நடவடிக்கைகள் நிதிப் பற்றாக்குறை காரணமாக ஒருபோதும் இடைநிறுத்தப்படக் கூடாது என்பதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது.

பல தசாப்தங்களாகப் பதிலுக்காகக் காத்திருக்கும் குடும்பங்களின் கேள்விகளை நாம் புறக்கணிக்க முடியாது. அவர்களின் குரலுக்குச் செவிசாய்த்து, உண்மையை கண்டறிந்து, அவர்களுக்கு நீதி மற்றும் நியாயத்தை வழங்குவது எமது கடமையும் பொறுப்புமாகும்.

அதேவேளை, கடந்த காலத்தில் இடம்பெற்ற துயரமான சம்பவங்களை நினைவுகூர்வதுடன் மட்டும் நின்றுவிடாமல், இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாத வகையில் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அரசாங்கத்தின் முக்கியப் பொறுப்பாகும். இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் வாழும் மக்களையும் புறக்கணிக்காமல், அனைவருக்கும் சமமான நீதி, பாதுகாப்பு, கண்ணியம் மற்றும் நல்ல வாழ்க்கையை உறுதிப்படுத்துவதுடன் அனைவருக்கும் நீதி கிடைக்கும் என்பதே எமது எதிர்பார்ப்பு. நாட்டு மக்கள் எங்களுக்கு ஆணை வழங்கியதும் இந்த எதிர்பார்ப்பிலாகும் எனத் தெரிவித்தார்.

அந்த மக்கள் ஆணையைப் பொறுப்புடனும் பொறுப்புக்கூறலுடனும் நிறைவேற்றுவோம்.

கடந்த காலத்தின் வேதனைகள் எதிர்காலத்தின் சமாதானத்திற்கான அடித்தளமாக அமைய வேண்டும். உண்மையை கண்டறிந்து, நீதியை நிலைநாட்டி, பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி, தேசிய நல்லிணக்கத்திற்கும் ஒற்றுமைக்கும் வலுவான அடித்தளத்தை அமைப்பதே எமது உறுதிப்பாடாகும் என்றார்.



# யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராக பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகை பொறுப்பேற்றார்!



யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராகப் பொறுப்பேற்ற பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகைக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேரில் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ள பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகையின் பணிப்பொறுப்பேற்பு நிகழ்வு 26ம் திகதி புதன்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் கலந்துகொண்டு புதிய ஆயருக்கு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

புதிய ஆயரின் பணிப்பொறுப்பேற்பை முன்னிட்டு நடைபெற்ற மத நிகழ்வில் மறைமாவட்டத்தின் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், திருச்சபை நிர்வாகிகள், விசுவாசிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பினர் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெருமளவானோர் பங்கேற்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "1988ஆம் ஆண்டு காணாமல்போன ஜனாதிபதி அநுர குமாரவின் மூத்த சகோதரருக்காக அவரது தாயார் இன்றும் பூஜை செய்து கொண்டிருக்கின்றார்"

## யாழ்ப்பாணத்தில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரம் தெரிவிப்பு!



- ந.லோகதயாளன்

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் மூத்த சகோதரரும் 1988ஆம் ஆண்டு காணாமல்போயிருந்தார். இன்றும் அவரது தாயார், தனது மூத்த மகன் ஒருநாள் திரும்பி வருவார் என்ற நம்பிக்கையுடன் பூஜை செய்து கொண்டிருக்கின்றார். அந்தத் தாயின் வேதனையை நேரில் பார்த்தது இன்றும் எனது நினைவில் உள்ளது. என இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரம் தெரிவித்தார்.

"வலிந்து காணாமலாக்கப்பட்டமையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினம்" காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஏற்பாட்டில் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த இலங்கையின் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அவர்கள் முன்னிலையில் கருத்து தெரிவித்த கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள அமைச்சர், சந்திரசேகரன் அவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்.

"இன்றைய நிகழ்வு ஒரு சாதாரண நிகழ்வல்ல. பல தசாப்தங்களாகத் தமது உறவுகளைத் தேடி, அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ள முடியாமல் வேதனையுடன் வாழ்ந்து வரும் குடும்பங்களின் ஆழமான துயரத்தை நினைவுகூரும் முக்கியமான நாளாகும் 30, 40 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமது உறவுகளைத் தேடிக்கொண்டிருக்கும் குடும்பங்கள் இன்றும் எம்மத்தியில் உள்ளனர். குறிப்பாக, கைது செய்யப்பட்ட பின்னரோ அல்லது ஒப்படைக்கப்பட்ட பின்னரோ காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகள் ஒருநாள் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் வாழும் தாய்மார்களின் வலியை வார்த்தைகளால் விவரிக்க முடியாது எனவும், இவ்வாறான நிலையில், இந்தப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது குறித்து நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இந்த அரசாங்கத்தை அமைத்தபோதே ஒரு விடயத்தைத் தெளிவாகக் கூறியிருந்தார் அதாவது, மக்களின் துன்பத்தையும் வேதனையையும் அன்பினால் மட்டுமே அணுகி மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதே அவரது நிலைப்பாடாகும்.

அதற்கு சிறந்த உதாரணமாக, காணாமலாக்கப்பட்டவர்களின் பல குடும்பங்களை எமது சொந்தக் குடும்பங்களாகக் கருதி நாம் அணுகி வருகின்றோம். அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று, அவர்களுடன் நேரடியாக உரையாடி, அவர்களின் பிரச்சினைகளையும் வேதனைகளையும் கேட்டறிந்து வருகின்றோம். அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ற வகையில் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

இன்று காலை எமது நீதி அமைச்சரும் வீடுகளுக்குச் சென்றார். மேலும் செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் கல்வி கற்று பொதுவாழ்க்கையில் இணைந்து தற்போது குடும்ப உறுப்பினர்களாக உள்ள 15 பேருக்கான தலா 50 லட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டுத் திட்டத்திற்கான காசோலைகளை வழங்கினார்.

அதேபோன்று, எமது பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் கடந்த காலங்களில் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களை வீடு வீடாகச் சென்று சந்தித்து, அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகளையும் தேவைகளையும் அறிந்து கொண்டுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகள் அனைத்தும் வெளியில் பெரிய விளம்பரங்களாக வெளியிடப்படுவதில்லை. நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாட்டையும் விளம்பரப்படுத்திக் கொண்டிருப்பதில்லை. மக்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் எதிர்நோக்கும் மிகப்பெரிய வேதனை என்னவென்றால், தங்களுடைய உறவுகள் ஒருநாள் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் இன்றும் காத்திருக்கின்றமையே ஆகும்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் பெரிய சகோதரரும் 1988ஆம் ஆண்டு காணாமல்போயிருந்தார். இன்றும் அவரது தாயார், தனது மூத்த மகன் ஒருநாள் திரும்பி வருவார் என்ற நம்பிக்கையுடன் பூஜை செய்து கொண்டிருக்கின்றார். அந்தத் தாயின் வேதனையை நேரில் பார்த்த அனுபவம் இன்னும் எனது நினைவில் உள்ளது.

அதேபோன்று, நாட்டின் மற்ற பகுதிகளிலும் காணாமல்போனவர்களின் குடும்பங்கள் உள்ளன. அவர்களும் தமது பிள்ளைகள் ஒருநாள் திரும்பி வருவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

வடக்கில் ஆயிரக்கணக்கானவர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். அவர்களைத் தேடி, அவர்களுக்காகப் போராடி, தங்களுடைய பிள்ளைகளின் புகைப்படங்களை கைகளில் ஏந்தியவாறு இன்றும் நடுங்கிய கைகளுடன் நீதியையும் உண்மையையும் தேடி போராடும் தாய்மார்களை நாம் காண்கின்றோம்.

இந்தப் பிரச்சினை 1980 களின் இறுதிப் பகுதிகளில் இருந்து தொடர்ந்து பேசப்பட்டு வருகின்றது. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரும் இதற்கான முழுமையான தீர்வு கிடைக்கவில்லை. எனவே, இவ்வாறான உணர்வுபூர்வமான பிரச்சினைகளை அரசியல் இலாபத்திற்காகப் பயன்படுத்தாமல், பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளையும் வேதனைகளையும் மதித்து அணுக வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும்.

அதேவேளை, மக்களின் காணி உரிமைகள் மற்றும் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் காணிப் பிரச்சினைகளுக்கும் எமது அரசாங்கம் தீர்வுகளை வழங்கி வருகின்றது.

கடந்த வருடமே சனாதிபதி பாராளுமன்றத்தில் வடக்கில் உள்ள மக்களின் காணிகளில் பெருமளவானவற்றை விடுவிக்க வேண்டும் என்று விசேடமாக அறிவித்திருந்தார்.

மக்கள் பூர்வீகமாகப் பயன்படுத்தி வந்த காணிகள், இன்னும் பல காணிகளையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

1980 காலப்பகுதிகளில் பல்வேறு திட்டங்களுக்காக மக்களிடமிருந்து பெறப்பட்ட காணிகளுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அந்தக் காணிகளுக்கு எவ்வாறு இழப்பீடு வழங்குவது, எந்த மதிப்பீட்டின் அடிப்படையில் இழப்பீடு வழங்குவது என்பது தொடர்பாக அதிகாரிகளிடம் ஆராயப்பட்டது. தற்போதைய சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் காணிகளுக்கான இழப்பீட்டை வழங்க வேண்டும் என்று சனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருந்த மக்களின் காணிப் பிரச்சினைகளையும், வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மக்களுக்காக வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்த வருடம் மாத்திரம் 1,500க்கும் மேற்பட்ட வீடுகளுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் வீடுகள் தேவைப்படும் நிலையில் மக்கள் தொடர்ந்து இருக்கக்கூடாது என்பதே சனாதிபதியின் நிலைப்பாடாகும். அடுத்த வருடம் தேவையான நிதியை வழங்கி, 13,000 வீடுகள் தேவைப்படும் இடங்களில் அவற்றை முழுமையாக நிர்மாணித்து முடிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, இனிமேல் மக்களிடையே தேவையற்ற குழப்பங்களையும், சந்தேகங்களையும், வேற்றுமைகளையும் ஏற்படுத்துவதற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

மக்களின் உண்மையான தேவைகளைப் புரிந்துகொண்டு, அவற்றுக்குத் தீர்வுகளை வழங்குவதற்காகச் செயற்படும் அரசாங்கமாகவும் நாம் இருக்கின்றோம்.

மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளையும் சலுகைகளையும் வழங்குவதற்காக அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. அதேவேளை, அரசாங்கத்தின் தலைவராக இருக்கும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தனக்குக் கிடைக்கக்கூடிய பல சலுகைகளைக் கைவிட்டு, எளிமையான வாழ்க்கை முறையைத் தெரிவுசெய்துள்ளார். சனாதிபதி மாளிகை, சொகுசு வாழ்க்கை, ஆடம்பர வாகனங்கள் உள்ளிட்ட பல விடயங்களை அவர் தவிர்த்துள்ளார்.

மக்களின் துயரங்களைத் தமது சொந்தத் துயரங்களாகக் கருதி, அவர்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்களின் வாழ்க்கையில் நம்பிக்கையை ஏற்படுத்துவதே இந்த அரசாங்கத்தின் நோக்கமாகும்.

காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் வேதனையைப் புரிந்துகொண்டு, அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, உண்மையையும் நீதியையும் நிலைநாட்டுவதற்கும், நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் காணி மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கும் அரசாங்கம் தொடர்ந்து செயற்படும்.

இவை அனைத்தும் வெறும் அறிவிப்புகளுக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அல்ல. மக்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளாகும்" என்றார்.





## நோபாளத்தில் சிக்கியுள்ள தமிழகத் தமிழர்களின் நிலை குறித்து முதல் அமைச்சர் விஜய் அவசர ஆலோசனை!

நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்களின் நிலை குறித்து அதிகாரிகளுடன் முதல் அமைச்சர் விஜய் அவசர ஆலோசனை நடத்தினர். நேபாளத்தின் வடக்கு எல்லையான ரசுவா மாவட்டத்தில், இமயமலைப் பகுதிகளில் பனிமலைகள் உடைப்பு காரணமாக கோசி, திரிசூலி நதிகளில் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளப்பெருக்கில் சிக்கி 175 பேர் உயிரிழந்துள்ளனர். 300 இந்தியர்கள் உட்பட சுமார் ஆயிரம் பேரைக் காணவில்லை எனக் கூறப்படுகிறது. நேபாளப் பெருவெள்ளத்தில் சிக்கிய தமிழர்கள் நிலை குறித்து சட்டப்பேரவையில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் விளக்கமளித்தார். மேலும், தமிழகத்தைச் சேர்ந்த 103 பேர் நேபாளம் சென்றிருந்தனர். இவர்களில், கும்பகோணத்தில் இருந்து சென்ற 57 பேரில் 21 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் கூறினார். நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்பது தொடர்பாக அதிகாரிகளுடன் முதல்-அமைச்சர் விஜய் அவசர ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனைக்குப் பிறகு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தலைமையிலான குழு நேபாளம் செல்ல விஜய் உத்தரவிட்டுள்ளார். டில்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல ஆணையர் ஆஷிஷ் குமார் தலைமையிலான அதிகாரிகள் குழு காத்மாண்டு சென்று, தமிழர்களின் நிலை குறித்து அறிந்து, நேபாள அரசுடன் இணைந்து மீட்புப் பணியை ஒருங்கிணைக்கும் என்று விஜய் கூறியுள்ளார்.

இதேவேளை, நேபாள வெள்ளப்பெருக்கில் சிக்கி 288 இந்தியர்கள் மாயமாகி உள்ளதாகவும், அவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் மத்திய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது "நேபாள வெள்ளப்பெருக்கில் சிக்கி மாயமான 288 இந்தியர்களின் நிலை குறித்த தகவல் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. காணாமல் போனவர்களில் "திரிசூலி ஒன்" மின் திட்டத்தில் பணிபுரியும் 73 இந்தியர்களும், சுற்றுலா குழுக்களும் அடங்குவர். இவர்கள் குறித்த கூடுதல் விவரங்களைப் பெறுவதற்காக, காத்மாண்டுவில் உள்ள இந்திய தூதரகம் நேபாள அரசுடன் தொடர்ந்து இணைப்பில் இருந்து வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த 21 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர். திபெத்தில் உள்ள சுமார் 200 இந்தியர்களும் இந்தியாவின் உதவியை நாடியுள்ளனர். இந்தக் கடினமான சூழலில் இந்தியா நேபாளத்துடன் உறுதுணையாக நிற்கிறது. அந்நாட்டின் தேவைக்கேற்ப அனைத்து உதவிகளையும் வழங்க இந்திய அரசு தயாராக உள்ளது." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## விஜய் தேவரகொண்டா நடித்த 'ரணபாலி' படம் அக்டோபர் 16ந் தேதி வெளியாகிறது

விஜய் தேவரகொண்டா நடித்த 'ரணபாலி' படம் அக்டோபர் 16ந் தேதி வெளியாகிறது. ராகுல் சாங்கிரித்யான் இயக்கத்தில் விஜய் தேவரகொண்டா, ராஷ்மிகா மந்தனா உள்ளிட்ட பலர் நடிக்கும் புதிய படத்திற்கு 'ரணபாலி" பெயர் வைக்கப்பட்டுள்ளது. வரலாற்றுப் பின்னணியில் உருவாகி உள்ள இந்த படம் அக்டோபர் மாதம் 16ந் தேதி உலகளவில் வெளியாக உள்ளது. தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகர்களாக வலம் வருபவர்கள் விஜய் தேவரகொண்டா மற்றும் ராஷ்மிகா மந்தனா. இவர்கள் ஏற்கனவே 'கீதா கோவிந்தம்', 'டியர் காம்ரேட்' ஆகிய திரைப்படங்களில் இணைந்து நடித்துள்ளனர். இந்த நிலையில், மூன்றாவது முறையாக இருவரும் புதிய திரைப்படத்தில் இணைந்துள்ளனர். விஜய் தேவரகொண்டா - ராஷ்மிகா மந்தனா நடிப்பில் உருவாகி வரும் இப்படத்திற்கு 'ரணபாலி' என பெயரிடப்பட்டுள்ளது. 'மம்மி' உள்ளிட்ட படங்களில் நடித்த அர்னால்ட் வோஸ்லூ இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் மற்றும் டி-சீரிஸ் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கும் இப்படத்திற்கு அஜய் - அதுல் இசையமைக்கின்றனர். 1870-களில் நடைபெற்ற பிரிட்டிஷ் ஆட்சி மற்றும் பெரும் பஞ்சத்தின் பின்னணியில் இப்படத்தின் கதை உருவாகியுள்ளது. அந்த காலகட்டத்தில் தனது மக்களை காப்பாற்ற போராடும் ஒரு புரட்சிகர வீரனை மையமாகக் கொண்டு கதை அமைக்கப்பட்டுள்ளது. உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாகி வரும் இப்படம், பிரம்மாண்டமான பான்-இந்திய திரைப்படமாக உருவாகி வருகிறது. தமிழ், தெலுங்கு உள்ளிட்ட 5 மொழிகளில் இப்படம் வெளியாக உள்ளது. இந்நிலையில், 'ரணபாலி' திரைப்படத்தின் வெளியீடு தேதி தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வரும் அக்டோபர் 16-ம் தேதி உலகம் முழுவதும் 'ரணபாலி' திரைப்படம் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

## 'டாக்சிக்' திரைப்படம் முதல் நாளிலேயே ரூ.140.75 கோடி வசூல்!

'டாக்சிக்' திரைப்படம் முதல் நாளில் ரூ.140.75 கோடி வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கன்னட திரையுலகின் முன்னணி நடிகரான யாஷ் நடிப்பில் உருவான திரைப்படம் 'டாக்சிக்'. கீது மோகன்தாஸ் இயக்கியுள்ள இப்படம் நேற்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியானது. கேவிஎன் புரொடக்ஷன்ஸ் நிறுவனம் தயாரிப்பில் கேங்ஸ்டர் டிராமா கதைக்களத்தில் வெளியான இதில் நயன்தாரா, கியாரா அத்வானி, ருக்மணி வசந்த், ஹுமா குரேஷி, தாரா சுதாரியா உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியான 'டாக்சிக்' திரைப்படம் ரசிகர்கள் மற்றும் விமர்சகர்கள் மத்தியில் கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது. குறிப்பாக, படத்தின் ஆக்ஷன் காட்சிகள் மற்றும் யாஷின் நடிப்பு கவனம் பெற்றுள்ளன. கலவையான விமர்சனங்கள் இருந்தபோதிலும், வசூலில் 'டாக்சிக்' திரைப்படம் முதல் நாளிலேயே மாஸ் காட்டியுள்ளது. அதன்படி, இப்படம் உலகளவில் முதல் நாளில் ரூ.140.75 கோடி வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதில் இந்தியாவில் மட்டும் ரூ.120.75 கோடியும், வெளிநாடுகளில் ரூ.20 கோடியும் வசூலித்துள்ளதாக கூறப்படுகிறது.

## கார்த்தி நடிக்கும் 'சர்தார் 2' படத்தின் 'மயில்வீரா' பாடல் வெளியானது

கார்த்தி நடிக்கும் "சர்தார் 2" படத்தின் "மயில்வீரா" பாடல் வெளியானது. பி.எஸ். மித்ரன் இயக்கத்தில் நடிகர் கார்த்தி இரட்டை வேடத்தில் நடித்து பெரும் வரவேற்பைப் பெற்ற "சர்தார்" திரைப்படத்தின் இரண்டாம் பாகமான "சர்தார் 2" படத்தின் மீதான எதிர்பார்ப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் வரும் செப்டம்பர் 10-ஆம் தேதி இப்படம் உலகமெங்கும் தியேட்டர்களில் பிரம்மாண்டமாக வெளியாகவுள்ளது. இப்படத்தின் முதல் பாடலான "மயில்வீரா" தற்போது வெளியாகி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. இப்படத்திற்கு இசையமைப்பாளர் சாம் சி.எஸ் இசையமைத்துள்ளார். அவரது இசைப் பயணத்தில் "சர்தார் 2" 100-வது திரைப்படம் என்ற பிரம்மாண்ட மைல்கல்லை எட்டியிருப்பதால், இப்படத்தின் பாடல்கள் மீது ரசிகர்களுக்கு ஆரம்பத்திலிருந்தே மிகப்பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் இந்த முதல் பாடல் அமைந்துள்ளது. "சர்தார்" முதல் பாகத்தில் இடம்பெற்ற "ஏறுமயிலேறி" பாடலைப் போல, இந்த இரண்டாம் பாகத்தின் முதல் பாடலும் முருகப் பெருமானை மையமாகக் கொண்ட ஒரு பக்தி மற்றும் ஃபோக் ரக பாடலாக உருவாகியுள்ளது. முகேஷ், அஃப்ரோஸ் மற்றும் வஹீசன் ராசையா ஆகியோர் பாடியுள்ள இப்பாடலை, நவீன ஹிப்-ஹாப் பீட்களுடன் கலந்து செம மாஸான ஆன்மீக அலையாக சாம் சி.எஸ் கொடுத்துள்ளார். இப்பாடல் வெளியாகி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. மேலும் முருகர் பக்தர்கள் அனைவருக்கும் விரும்பும் பாடலாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பிரின்ஸ் பிக்சர்ஸ் தயாரிப்பில் பிரம்மாண்டமாக உருவாகி வரும் இப்படத்தில் கார்த்தியுடன் இணைந்து எஸ்.ஜே.சூர்யா மிரட்டலான வில்லனாக நடிக்கிறார். மேலும் மாளவிகா மோகனன், ஆஷிகா ரங்கநாத், யோகி பாபு மற்றும் ரஜிஷா விஜயன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். மேலும் நடிகர் கார்த்தியின் அதிரடித் திரைப்படமான "சர்தார் 2" வருகிற செப்டம்பர் 10, அன்று விநாயகர் சதுர்த்தி வாரத்தை முன்னிட்டு உலகமெங்கும் திரையரங்குகளில் வெளியாகிறது. இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய 5 மொழிகளில் ஒரே நேரத்தில் வெளியாக உள்ளது.

## திடீர் வெள்ளத்தில் சிக்கி 300-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் மாயமானதாக நேபாள வெளியுறவு அமைச்சர் கூறினார்

திடீர் வெள்ளத்தில் சிக்கி 300-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் மாயமானதாக நேபாள வெளியுறவு அமைச்சர் சிஷிர் கனால் கூறினார். நேபாள-திபெத் எல்லைப் பகுதிகளில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கி ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ள நிலையில், அவர்களில் சுமார் 300 இந்திய சுற்றுலாப் பயணிகளும் அடங்குவர் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஏற்பட்ட இந்தத் திடீர் வெள்ளம் நேபாளத்தின் மூன்று மாவட்டங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. வெள்ளத்தில் காணாமல் போன ஆயிரக்கணக்கானோரில் சுமார் 300 இந்தியர்களும் அடங்குவர் என்று நேபாள வெளியுறவு அமைச்சர் சிஷிர் கனால் கூறினார். மேலும், ராசுவா பகுதியில் ஏற்பட்ட இந்த துயரச் சம்பவத்தில் 160 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. மேலும், ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழந்துள்ளன் பெரும்பாலானோர் காணாமல் போயுள்ளனர். பேரிடரின் முழு அளவை நாங்கள் இன்னும் கண்டறிய முயற்சித்து வருகிறோம் என்று அவர் தெரிவித்தார். நேற்று மூன்று மாவட்டங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய போட்டேகோஷி நதி வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 200-ஐ தாண்டி உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

பனிச்சரிவு காரணமாக போட்டேகோஷி நதியின் கிளை நதியான லெண்டேவின் நீரோட்டம் தடைபட்டதால் இந்தத் திடீர் வெள்ளம் ஏற்பட்டது இது முதலில் சீனாவுடனான நேபாள எல்லையான ராசுவாகதிக்கு அருகிலுள்ள டிமுரே பகுதியைத் தாக்கியது. காணாமல் போன சுமார் 500 பேரில் குறைந்தது 133 இந்தியர்களும் 37 வெளிநாடு வாழ் இந்தியர்களும் அடங்குவர் என்று தகவல் வெளியானது. காணாமல் போன இந்தியர்களில் குறைந்தது 50 பேர் கைலாஷ் மானசரோவர் யாத்திரைக்காகச் சென்றவர்கள் ஆவர்.

## ஜப்பானின் பிரபல ஓவியர் யாயோய் குசாமா காலமானார்

ஜப்பானை சேர்ந்த பிரபல ஓவியர் யாயோய் குசாமா தனது 97 வயதில் காலமானார். ஜப்பானில் உள்ள நாகானோ மாகாணத்தில் 1929-ம் ஆண்டு பிறந்தார் யாயோய் குசாமா. இவர் சிறுவயதில் இருந்தே ஓவியம் சார்ந்த கலைத்துறையில் ஆர்வமிக்கவராக இருந்து வந்தார். கலைத்துறை மூலமாக அமெரிக்காவின் நியூயார்க் சென்ற அவர், தனது பிரத்யேகமான புள்ளி வடிவ ஓவியங்களால் புகழ்பெற்றார். சிறிது காலத்திலேயே "இன்பினிட்டி நெட்ஸ்" என்ற ஓவியத் தொடரை வெளியிட்டு பிரபலமானார். 1960-களில் ஆண் ஆதிக்கம் நிறைந்த நியூயார்க் கலை உலகில் தனது தனித்துவமான படைப்புகளால் கவனம் பெற்று, அங்குள்ள கலைத்துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தினார். நியூயார்க்கில், 1965 ஆம் ஆண்டு தனது முதல் "இன்பினிட்டி மிரர் ரூம்" கலையை உருவாக்கினார். ஒரு சிறிய அறைக்குள் நுழைந்தாலும், அது பல கிலோமீட்டர் நீளமுள்ள ஒரு பிரம்மாண்டமான விண்வெளியில் நிற்பது போன்ற உணர்வைத் தரும். இது உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்களிடையே வரவேற்பை பெற்றது. பின்னர் பல ஆண்டுகள் கலை உலகில் புறக்கணிக்கப்பட்ட போதிலும், தனது 80 மற்றும் 90 வயதில் உலகின் மிகவும் பிரபலமான கலைஞர்களில் ஒருவராக குசாமா உயர்ந்தார். அவர் வரைந்த ஓவியம் ஒன்று 2022-ம் ஆண்டு நடைபெற்ற ஏலத்தில் சுமார் 10.5 மில்லியன் அமெரிக்க டாலருக்கு விற்பனையானது. இது இந்திய மதிப்பில் சுமார் 100.28 கோடி ஆகும். மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த அவர் மனநல சிகிச்சைக்காக டோக்கியோவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தீவிர சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஆகஸ்ட் 14-ந்தேதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது குடும்பத்தினர் இறுதிச் சடங்கை அமைதியான முறையில் முடிக்க விரும்பியதால், 13 நாட்கள் கழித்து கலை நிறுவனத்தால் அவரது மரண செய்தி மக்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அவரது மறைவு கலைத்துறையினரிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## நானி நடித்துள்ள 'தி பாரடைஸ்' படம் செப்டம்பர் 24ம் தேதி வெளியாகிறது

ஸ்ரீகாந்த் ஒடேலா இயக்கத்தில் நானி நடித்துள்ள 'தி பாரடைஸ்' படம் செப்டம்பர் 24ம் தேதி வெளியாகிறது. நானி நடிப்பில் இயக்குனர் ஸ்ரீகாந்த் ஒடேலா இயக்கத்தில் 2023ம் ஆண்டு வெளிவந்த படம் 'தசரா'. 'தசரா' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, ஸ்ரீகாந்த் ஒடேலா இயக்கத்தில் நானி மீண்டும் அவரது 33- வது படமான 'தி பாரடைஸ்' என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை எஸ்.எல்.வி. சினிமாஸ் தயாரிக்கிறது. 'தசரா' படத்தை போலவே நானி இதிலும் வித்தியாசமான கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். நானி நடிப்பில் கடைசியாக வெளியான சரிபோத சனிவாரம், ஹிட் 3 திரைப்படங்கள் வசூல் ரீதியாக ரூ. 100 கோடியைக் கடந்ததால் அவரது படங்களின் பட்ஜெட்டும் அதிகரித்து வருகின்றன. அனிருத் இசையமைத்து வரும் இந்த படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, பெங்காலி, ஸ்பானிஷ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் செப்டம்பர் 24ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் நடிகர்கள் மோகன் பாபு, சோனாலி குல்கர்னி, கயாடு லோஹர், சம்பூர்ணேஷ் பாபு ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

ontarioliberal.ca/ssw | @ontarioliberalparty

LIBERAL

# AHSANUL HAFIZ

THE CANDIDATE FOR YOU IN SCARBOROUGH SOUTHWEST

ஸ்கார்பரோ மக்களே!
உங்கள் மாகாண அரசிடமிருந்து
நீங்கள் இன்னும் அதிகமாகப் பெறுவதற்குத்
தகுதியானவர்கள்.

டக் ஃபோர்டின் 8 ஆண்டு ஆட்சிக்குப் பின்னர்,
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
குடும்பங்கள் அதிகமாகச் செலுத்துகிறார்கள்,
நீண்ட காலம் காத்திருக்கிறார்கள்,
மேலும் எதிர்பார்ப்பதிலும் பார்க்க குறைவாகவே
பெறுகிறார்கள்.

## அஹ்சானுல் ஹாஃபிஸ்

ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
உங்களுக்கான
வேட்பாளர்



*Authorized by the Scarborough Southwest Riding Association



## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள்**
**ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca




11/24





# முஸ்லிம்களிடம் இருப்பதும் தமிழர்களிடம் இல்லாததும்...

• கே.பாலா




“ஒரு இனத்திற்கு அல்லது அந்த இனத்தின் மதத்திற்கு, கலாசாரத்திற்கு, உரிமைகளுக்கு அச்சுறுத்தல் வரும்போது அந்த இனம்இஅதன் அரசியல் கட்சிகள் தமது அரசியல் வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைவது புத்திசாலித்தனமா அல்லது அவ்வாறான நெருக்கடியிலும் ஒரு இனம்இஅதன் அரசியல் கட்சிகள் தமது தலைக்கன பிடிவாதங்களிலும்இ கொள்கை முரண்பாடுகளிலும் பகை உணர்விலும் பழிவாங்கும் போக்கிலும் உறுதியாக நிற்பதுதான் புத்திசாலித்தனமா?““

இலங்கையின் சிறுபான்மை அரசியல் வரைபடத்தில் ஒரு விசித்திரமான முரண்பாடு தொடர்ந்து நீடித்து வருகிறது. ஒரு சமூகத்திற்கு நெருக்கடி அல்லது அச்சுறுத்தல் என்று வரும்போது, அவர்கள் அரசியல், கட்சி, மாகாண, மாவட்ட எல்லைகளைக் கடந்து ஒரே கொடியின் கீழ், ஒரே குரலில் திரண்டு நிற்கின்றனர். ஆனால், மற்றொரு சமூகமோ தன் வரலாற்றில் எத்தனை பெரிய அச்சுறுத்தல்களையும், நெருக்கடிகளையும் எதிர்கொண்ட போதிலும், கொள்கை முரண்களாலும் உள்அரசியல் பிளவுகளாலும் சிதறி நிற்கிறது. அதில் முதலாவது வகை முஸ்லிம் இனம். இரண்டாவது வகை தமிழினம்.

ஒரு இனத்திற்கு அல்லது அந்த இனத்தின் மதத்திற்கு, கலாசாரத்திற்கு, உரிமைகளுக்கு அச்சுறுத்தல் வரும்போது அந்த இனம், அதன் அரசியல் கட்சிகள் தமது அரசியல் வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைவது புத்திசாலித்தனமா அல்லது அவ்வாறான நெருக்கடியிலும் ஒரு இனம். அதன் அரசியல் கட்சிகள் தமது தலைக்கன பிடிவாதங்களிலும்இகொள்கை முரண்பாடுகளிலும் பகை உணர்விலும் பழிவாங்கும் போக்கிலும் உறுதியாக நிற்பதுதான் புத்திசாலித்தனமா என்பது இலங்கை அரசியலை உற்றுநோக்கும் எவருக்கும் எழும் முதன்மையான வினா .அந்த வினாவை கல்முனை வடக்கு வைத்தியசாலையில் 9 முஸ்லிம் பெண் சுகாதார உதவியாளர்களின் ஆடைச் சர்ச்சையும் அதன் வெளிப்பாடான இனவாதஇ மதவாத கூச்சல்களும் மேலும் பலமாக எழுப்பியுள்ளன.

இலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஒரு பிரச்சினை எழும் போதுஇ அந்த மக்களும் அவர்களின் அரசியல் கட்சிகளும் தங்களின் பிரதேச மற்றும் கட்சி அடையாளங்களைக் கழற்றி வைத்துவிட்டு ”ஒரே சமூகம்” என்ற ஒற்றைப் புள்ளியில் விரைவாக ஒன்றிணைகின்றனர். முஸ்லிம் சமூகத்தின் அரசியல் ஒருமைப்பாட்டிற்கு அவர்களின் மத அடையாளமும், பள்ளிவாசல்களை மையமாகக் கொண்ட சமூகக் கட்டமைப்பும் பிரதான அடித்தளமாக அமைகின்றன.மாகாணஇமாவட்ட மற்றும் அரசியல், கட்சி வேறுபாடுகளைக் கடந்த பொதுப் பிரச்சினைகள்இ மத உரிமைகள், கலாசார அடையாளங்கள் அல்லது சமூக பாதுகாப்பு சார்ந்த அச்சுறுத்தல்கள் எழும்போது, கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு அவர்கள் ஒன்றிணையும் போக்கு அவர்களின் பலமாகவேயுள்ளது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் நில மற்றும் சமூக பின்னணி அடிப்படையில் வெவ்வேறு பிரிவுகளாக உள்ளனர். வடக்குத் தமிழர்கள், கிழக்குத் தமிழர்கள். மலையகத் தமிழர்கள் என 3 பிரிவுகளாக பிரிந்துபோயுள்ளனர். அதுமட்டுமன்றி தமிழ் அரசியல் தளத்தில் மிதவாத அரசியல், தீவிர தேசியவாத அரசியல், இடதுசாரி அரசியல் மற்றும் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படும் அரசியல் எனப் பலதரப்பட்ட அரசியல் சித்தாந்தங்களும் உள்ளன. அதுமட்டுமன்றி தமிழ் தேசிய அரசியல் கட்சிகளுக்கிடையிலான உள்முரண்பாடுகள் மற்றும் தலைமைகளுக்கிடையிலான போட்டி என்பனவற்றால் பொதுவான தளத்தில் ஒன்றிணைவது சவாலாக அமைகிறது. இதனால் தமிழ் மக்களும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளும் தங்களுக்கு எதிராக எவ்வளவு பெரிய நெருக்கடிகள் வந்தாலும் ஓரணியில் திரள முடியாமல் தடுமாறுகின்றனர்.

இலங்கை சிறுபான்மையினரின் உரிமைப் போராட்டத்தில் “ஒருமைப்பாடு“ என்பது வெறும் அரசியல் சொல்லாடல் அல்ல.அது அவர்களின் அரசியல் பேரம் பேசும் சக்தியைத் தீர்மானிக்கும் முதன்மை காரணி . அந்த வகையில் மதம் சார்ந்த சகோதரத்துவக் கோட்பாட்டையும், பள்ளிவாசல் மையக் கட்டமைப்பையும் மூலதனமாகக் கொண்டு இயங்கும் முஸ்லிம் சமூகம், தமது இன, மத, கலாசாரங்களுக்கு எதிரான நெருக்கடி வேளைகளில் எந்தவித பிளவுகளுமின்றி, தடையுமின்றி ஓரணியில் திரளும் தகவமைப்பைக் கொண்டுள்ளது.

அதேவேளையில், மொழி, நிலப்பரப்பு, சிக்கலான அரசியல் சித்தாந்தங்கள், தலைக்கன அரசியல், தமிழ் மக்களுக்கான தலைமைத்துவத்தில் நீயா. நானா போட்டி மற்றும் கடந்தகால வரலாற்று வடுக்களைக் கொண்ட தமிழ் சமூகம், ஒரு பொதுப் பிரச்சினையின் போதும் கூட ஓரணியில் திரள முடியாமல் சிதறி நிற்கின்றது . இந்த முரண்பாடான இயக்கவியலை வெறும் அரசியல் விமர்சனமாகப் பார்க்காமல், சமூகவியல் மற்றும் வரலாற்று ரீதியாக அணுக வேண்டியது தற்கால அரசியலுக்கு மிகவும் அவசியமானது.

இந்த இரு சமூகங்களின் முற்றிலும் மாறுபட்ட அரசியல் அணுகுமுறைக்கான பின்னணி என்ன? தமிழ் அரசியலின் இந்த பலவீனத்திற்கான மூலக்காரணங்கள் எங்கே உள்ளன?முஸ்லிம் சமூகத்தின் இந்த “நெருக்கடி நேர ஒருமைப்பாடும்“இ தமிழ் சமூகத்தின் நெருக்கடி நேரத்திலும் தூக்கிப்பிடிக்கப்படும் “தீராத பிளவுகளும்“ போட்டி அரசியலும் வெறும் உணர்ச்சி சார்ந்த விவகாரங்கள் அல்ல.அவற்றிற்குப் பின்னால் ஆழமான வரலாற்றுஇ சமூகஇ மத மற்றும் மூலோபாயக் காரணிகள் ஒளிந்துள்ளன.

கல்முனை வடக்கு வைத்தியசாலையில் 9 முஸ்லிம் பெண் சுகாதார உதவியாளர்களின் ஆடைச் சர்ச்சையில் முஸ்லிம் இனமும் அவர்களின் பிரதிநிதிகளான முஸ்லிம் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரண்டு மிடுக்காக நின்றன.முஸ்லிம் மக்களில் பெருமளவானோர் இம்முறை தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தாலும் இவ்விடயத்தில் அவர்கள் அரசாங்கத்தையும் குற்றம்சாட்டஇ விமர்சிக்க தயங்கவில்லை.அதுபோல் அரசியல் கட்சிகள் என்ற வகையில் தமக்கிடையில் பல பிளவுகளையும் கொள்கைகளையும் கொண்டிருந்தபோதும் எதிரணி அரசு தரப்பு என்ற பாகுபாடின்றி முஸ்லிம் அரசியல்தலைவர்களும் எம்.பி.க்களும் ஓரணியாக எழுந்து நின்றனர்.

கல்முனை வடக்கு வைத்தியசாலையில் 9 முஸ்லிம் பெண் சுகாதார உதவியாளர்களின் ஆடை சர்ச்சையில் அந்த வைத்தியசாலையின் பணிப்பாளரான டாக்டர் சுகுணன் முஸ்லிம் மக்களினாலும் முஸ்லிம் அரசியல் கட்சிகளினாலும் குற்றம்சாட்டப்பட்டதுடன் அவர் ஒரு தமிழர் என்பதால் தமிழினம் மீதும் முஸ்லிம் சமூகத்தினாலும் முஸ்லிம் அரசியல் கட்சிகளினாலும் இனவாதம்.மதவாதம் தாராளமாகவே அள்ளி இறைக்கப்பட்டன. அதிலும் இன்று இனங்கள், மதங்களிடையிலான பிளவுகளின் பிரதான சூத்திரதாரியாகவிருக்கும் “சமூகவலைத்தளம்” என்ற சீரழிவின் மூலம் தமிழினமும் இந்து மதமும் எந்தளவுக்கு கேவலப்படுத்த முடியுமோ அந்தளவுக்கு சில முஸ்லிம் அடிப்படைவாதிகளினால் கேவலப்படுத்தப்பட்டன.

ஆனால் இந்த கல்முனை வடக்கு வைத்தியசாலையில் 9 முஸ்லிம் பெண் சுகாதார உதவியாளர்களின் ஆடை சர்ச்சையில் அந்த வைத்தியசாலையின் பணிப்பாளரான டாக்டர் சுகுணன் மற்றும் தமிழினம், இந்துமதம் மீது இனவாத, மதவாத சேறடிக்கப்பட்ட போதும் மிகவும் அருவருக்கத்தக்கஇ கேவலமான முறையில் குற்றம்சாட்டப்பட்ட, விமர்சிக்கப்பட்டபோதும் அதற்கு எதிராக குரல் கொடுக்க தமிழினம் ஒன்று சேரவில்லை. இவ்விடயத்தில் தமிழினம் பெரிதாக அலட்டிக்கொள்ளாத நிலையில் தமிழ் தேசிய அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் தமக்கிடையிலான் போட்டி பொறாமைகளினால் ஒவ்வொரு நிலைப்பாட்டில் இருந்தன.

கல்முனை வடக்கு வைத்தியசாலை ஆடைச் சர்ச்சையில் இலங்கை தமிழரசுக்கட்சி, அந்த வைத்தியசாலையின் பணிப்பாளரான டாக்டர் சுகுணன் அரசின் சுற்று நிருபத்தின்படியே செயற்பட்டார். இதில் இனவாதம், மதவாதம் கிடையாது. சுற்றுநிருபத்தை ஏற்க முடியாதென இன்று கூச்சலிடும் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருக்கும் போதே இந்த சுற்று நிருபம் கொண்டுவரப்பட்டது .அப்போது ஏன் இவர்கள் வாய்திறக்கவில்லை?. 20 ஆவது திருத்தத்துக்கும், கொரோனா காலத்தில் முஸ்லிம் மக்களின் ஜனாசாக்களை தகனம் செய்யும் தீர்மானத்துக்கும் ஆதரவளித்தவர்கள், அப்போதைய ஆட்சியாளர்களின் காலில் விழுந்து கிடந்தவர்கள் சுற்றுநிருபம் பற்றி அரசாங்கத்துடன் பேசுவதற்கு தற்துணிபு இல்லாமல் இன்று இவர்கள் தமிழ் மக்கள் மீது குற்றஞ்சாட்டுகிறார்கள்.

தமிழ் பேசும் ஆறு அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதை விரும்பாத இரண்டு தரப்பினர்கள் இங்கு உள்ளனர் . ஒன்று அரசாங்க தரப்பு, தமிழ் பேசும் பிரதான 6 அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டால் எதிர்காலத்தில் அது தமக்கு சவாலாக அமையும் என்பதை அரசாங்கம் நன்கறியும் .இன்னொன்று, இனவாதத்தை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்படும் தரப்பு .இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக முஸ்லிம் மக்கள் பேச வேண்டும், முஸ்லிம் மக்களுக்கு எதிராக தமிழ் மக்கள் பேச வேண்டும். இரண்டு இனத்தவர்களும் அடித்துக் கொள்ள வேண்டும்.அதனூடாக தாம் அரசியல் இலாபம் தேட வேண்டும் என்பது இந்த இரண்டாவது தரப்பின் எண்ணம். இந்த இரண்டு தரப்பும் தற்போதைய பிரச்சினையை கொண்டு குளிர்காய்வது வெளிப்படையாக தெரிகிறது.எனவே முஸ்லிம் அரசியல் கட்சிகள் இந்த ஆடை சர்ச்சையை தமது இனவாதஇமதவாத அரசியலுக்காக தொடர்ந்தும் வைத்திருக்கவே விரும்புகின்றனர். எனவே இந்த ஆடை சர்ச்சைக்கு தமிழர்களை குற்றம்சாட்ட முடியாதென காட்டமாகவே கூறியது.

அதேநேரம் ஆடை சர்ச்சையின் அடிப்படையில் கல்முனை வைத்தியசாலையில் 9 முஸ்லிம் பெண் சுகாதார உதவியாளர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டமை கண்டிக்கத்தக்கது. ஒரு சமூகத்தின் கலாசார, மத அடையாளங்கள் மதிக்கப்பட வேண்டியது மனித உரிமைகளின் அடிப்படைப்பண்பு. இந்த விடயத்தில் நேரடியாக தலையிட வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்குண்டு.சுற்று நிருபத்தின்படிதான் இந்தப்பிரச்சினை எழுந்துள்ளது .சுற்று நிருபத்தின்படி கல்முனை வைத்தியசாலையில் கலாசார ஆடையுடன் 9 முஸ்லிம் பெண் சுகாதார உதவியாளர்களும் பணிபுரிய முடியாதென்றால் அவர்கள் எப்படி கல்முனை அஷ்ரப் வைத்தியசாலையில் பணிபுரிய முடியும்?

எனவே இந்த ஆடை சர்ச்சையின் பின்னணியில் இஇரு சமூகங்களை மோத விடும் திட்டத்தில் அரசாங்கம் உள்ளதோ என்ற சந்தேகம் எழுகின்றது. அவ்வாறில்லையென்றால் அந்த 9 முஸ்லிம் பெண் சுகாதார உதவியாளர்களையும் கல்முனை வைத்தியசாலையில் பணிபுரிய அனுமதிக்க வேண்டும். அவர்கள் தமது கலாசார ஆடையுடன் பணிபுரிய முடியுமென அறிவிக்க வேண்டும். தமிழ் மக்கள் மத, கலாசாரங்களை மதிக்கின்றவர்கள். எனவே கல்முனை வைத்தியசாலை ஆடை சர்ச்சைக்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாறுபட்ட கருத்தை தெரிவித்தார்.

சுயேட்சைக்குழு 17 இன் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யும் தமிழ் மக்களின் வெறுப்புக்குள்ளானவருமான அர்ச்சுனா இராமநாதனோ கல்முனை வடக்கு வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் சுகுணன் மிக மோசமான இனவாதி முதலில் கருணாவுடன் இருந்ததுடன் பின்னர் ரணிலுடன் இருந்தவர். நான் வடக்கு மாகாணசபையை பொறுப்பேற்றவுடன் முஸ்லிம் மக்களுக்காக குடியேற்ற ஒதுக்கப்பட்ட பொம்மைவெளி, காக்கைத்தீவு பகுதிகளை அபிவிருத்தி செய்வதே எனது முதல் பணி. ஒரு இனத்தை இன்னொரு இனம் அடக்கினால் அந்த அடக்கும் இனத்திலிருந்து ஒருவன் அதற்கு எதிராக கதைக்காதுவிட்டால் இந்த நாட்டிலிருந்து இனவாதத்தை ஒழிக்க முடியாது. அந்தவகையில் எனது சகோதர இனத்துக்காக நான் கதைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த அரசாங்கம் முதுகெலும்பு இல்லாத அரசாங்கமாக இருக்கின்றது. எல்லை நிர்ணய குழுவில் ஒரு முஸ்லிம் இல்லை. அமைச்சரவையில் ஒரு முஸ்லிம் இல்லை புண்ணியத்தால் பிரதி சபாநாயகராக ஒரு முஸ்லிம் உள்ளார். முஸ்லிம்களுக்கு செஞ்சோற்றுக் கடனை செய்துவிட்டுபோகவே இந்த சில நிமிடங்களை பயன்படுத்துகின்றேன். என்னுடைய இனத்தில் இருந்து உங்களுடைய இனத்திற்கு கல்லெறியப்படுமாக இருந்தால் அந்தக்கற்களை எங்களுடைய இதயம் தாங்கிக்கொள்ளும் என்று பாராளுமன்றத்தில் கூறியதுடன் கல்முனை வடக்கு வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட அந்த 9 முஸ்லிம் பெண் சுகாதார உதவியாளர்களையும் அவர்களின் கலாசார ஆடையுடன் பணிபுரிய அனுமதிக்க வேண்டுமென வலியுறுத்தி பிரேரணை ஒன்றையும் கொண்டு வந்து விவாதம் நடத்தினார்

எனவே இலங்கை சிறுபான்மையினரின் அரசியல் வரலாறு நமக்குக் கற்பிக்கும் பாடம் தெளிவானது.”ஒருமைப்பாடு இல்லாத பேரம் பேசும் சக்திஇ அரசியல் அரங்கில் வெறும் கோஷமாகவே எஞ்சும்.” முஸ்லிம் சமூகம் தங்களின் கட்டமைக்கப்பட்ட சிவில் அமைப்புகளின் மூலம் நெருக்கடி நேரங்களில் செலுத்தும் தாக்கம், தமிழ் சமூகத்திற்கு ஒரு முக்கியமான படிப்பினையைத் தருகிறது. கொள்கைப் பிடிப்பும் வரலாற்று உரிமைகளும் ஒரு சமூகத்திற்கு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமானது நெருக்கடி வேளைகளில் சுயநலன்களைத் துறந்து ஒரே குரலில் பேசுவது. தமிழ் அரசியல் தலைமைகளும் சிவில் அமைப்புகளும் கடந்தகால பிளவுகளிலிருந்தும், தேர்தல் இலாபங்களிலிருந்தும் வெளிவந்து பொது இலக்கை நோக்கிச் செயல்படாத வரை, நெருக்கடிகள் வரும்போதெல்லாம் தமிழ் சமூகம் சிதறி நிற்பதும், பேரம் பேசும் சக்தியை இழப்பதும் தவிர்க்க முடியாத ஒன்றாகவே தொடரும்.

# மரண அறிவித்தல்



## இறப்பு
## 25-08-2026

யுாழ்ப்பாணம். கலட்டி, இலண்டன், ரொறன்ரோ. உடுவில் ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்ட Dr. நடராஜா சுப்பிரமணியம் அவர்கள் 25-08-2026 அன்று உடுவிலில் இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கலட்டி தாமோதரம்பிள்ளை சுப்பிரமணியம் - அருளம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனும், வட்டுக்கோட்டை காலஞ்சென்ற இரட்ணசபாபதி- நேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜெயலட்சுமியின்
கணவரும்,
சுமதி (கனடா), Dr. சுரேன் நிமலன் (இந்தியா), சுகுணன் (பொதுமுகாமையாளர் HNB Life) ஆகியோரின் தந்தையும்.
R.R. ராஜ்குமார் (நிதி ஆலோசகர் கனடா) JRB Group Dr. (Prof) புஸ்பகரன், நிமலன் (இந்தியா), திருமதி. துஸ்யந்தி சுகுணன் (சிரேஸ்ட விரிவுரையாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாரும், சாயிபிரிந்தன் ராஜ்குமார் (Daster Media Coop Canada), பிரகலாத் நிமலன் (இந்தியா), துருவார் நிமலன் (இந்தியா), விஜியந்தி சுகுணன், விதுவப்பிரியா சுகுணன் ஆகியோரின் பாட்டனாரும், மனோரஞ்சிதம் பாலேந்திராவின் (கனடா), சகோதரருமாவார்.
அன்னாரின் பூதவுடல் உடுவிலில் அவரது இல்லத்தில் 30-08-2026 ஞாயிற்றுக்கிழமை அன்று பார்வைக்கு வைக்கப்பட்டு 31.08-2026 திங்கட்கிழமை காலை 9:00 மணிக்கு ஈமைக்கிரியைகள் நடைபெற்று. மானிப்பாய் பிப்பிலி இந்த மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும்.
இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**Dr. நடராஜா சுப்பிரமணியம்**

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு:
ராஜ்குமார்- 1-647-289-6164
நடராஜா - 077 283 4462
No 7 லவ் லேன்
உடுவில்- யாழ்ப்பாணம்



# “நாமெல்லாம் பாரதியின் வாரிசுகளே!...”

- ஜெயகாந்தன



“நாம் எல்லோருமே பாரதியின் வாரிசுதான். சில பேர் அதை உணர்ந்திருக்கிறார்கள். சில பேர் அதை உணராமலும் இருக்கலாம். ஆனால், பாரதியிலிருந்துதான் நம்முடைய சிந்தனை, நம்முடைய கலாசாரம், நம்முடைய வாழ்க்கை முறை இதெல்லாம் சரியான அர்த்தத்தில் நவீனம் பெற ஆரம்பித்தன. பாரதி, மகாகவி மட்டுமல்ல, மகா புருஷர்ஸு மகத்தான சமூக சிந்தனாவாதிஸு சமூக விஞ்ஞானிஸு இந்த உலகத்தைப் புனருத்தாரணம் செய்ய வந்த சிற்பி.

எங்களுடைய நண்பர்கள் சபையில் நாங்கள் அடிக்கடி ஒரு கேள்வியைக் கேட்பதுண்டு, பாரதியாரை நீ எப்படி பரிச்சயம் கொண்டாய்? முதலிலே உனக்கு என்ன பாடல் தெரியும்?' இந்த கேள்விக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு அனுபவத்தைச் சொல்லுகிற பொழுது, எப்படி பாரதி வேரிலேயிருந்து இந்தப் புதிய தலைமுறை பரிணமித்து வந்திருக்கிறது என்கிற சமூக உண்மையை அறிந்து கொள்கிற ஞானம் பெற முடியும்.

இந்த கேள்வியை என்னைக் கேட்டபோது, எனக்கு பதிலே தெரியவில்லை. அறிவறிந்த பருவத்திலிருந்து, நந்தன் கதையிலே காலில் நகம் முளைத்த நாள் முதலாய்' என்று சொல்வான், அது மாதிரி, ஷஓடி விளையாடு பாப்பா' என்ற பாடலைக் கேட்கின்ற பருவத்திலேயிருந்து, அவரது பகவத் கீதை' உரையைப் பயில்கிற பக்குவம் வரை பாரதி நம்முடைய அறிவில், சிந்தையில், ஊனில், உயிரில், உடலில் கலந்து கலந்து நம்மைக் காலந்தோறும் உயிர்ப்பித்துக் கொடுப்பதனை உணர்கிற பலரில் நான் ஒருவன்.

நம்மையெல்லாம் - காலம் கடந்து வாழ்கிற, நாடு கடந்து வாழ்கிற பிரபஞ்சம் முழுவதும் பரவிக் கிடக்கிற தமிழர்களையெல்லாம் - ஒன்றிணைக்கிற ஒரு மாபெரும் சக்தி மகாகவி பாரதி என்பதனை அவரது எழுத்துகள் சொல்லும். சைபீரியப் பாலைவனத்திலிருந்து பிஜித் தீவிலே கரும்புத் தோட்டத்திலே கண்ணீர் வடித்து அழுகின்ற பெண்கள்வரை, அவரது உலகப் பார்வை வியாபித்திருந்தது. தமிழர்காள்! மகாகவி பாரதியின் பார்வை படாத இந்தப் பிரபஞ்சத்தை நீங்கள் எங்கேயும் பார்க்க முடியாது.

பாரதியைப் பற்றி நிறைய செய்திகள் உண்டு. அவரது காலம் ரொம்பக் குறுகியது. 39 ஆண்டுதான். நாற்பது வயது கூட ஆகவில்லை. அவரைப் படிக்கிற பொழுது - சிலரைப் படிக்கிறபோதுதான் நமது உள்ளத்திலேயிருந்து அந்த சொற்கள் வருகின்றன என்று தோன்றும். எல்லாரும் கவிதை எழுதுகிறார்கள். நன்றாக எழுதுகிறார்கள். பாரதியாரை விடக் கூட நன்றாகக் கவிதை எழுதுபவர்கள் இருப்பதாக நினைப்பவர்களும் நிரூபிப்பவர்களும்கூட உண்டு. ஆனால், அவரை மாதிரி காலத்தைப் பிணைக்கிற ஒரு மகத்தான சக்தியாய் யார் இருக்கிறார்கள்? கவிஞன் என்றால் சோம்பித்திரிபவர்கள்ஸு சுருண்டு கிடப்பவர்கள்ஸு குனிந்து நடப்பவர்கள்ஸு நிமிர்ந்து நிற்க முடியாதவர்கள்ஸு அழுக்குப் பிடித்தவர்கள் என்றெல்லாம் இக்காலத்தில் பல கோலங்கள் காட்டுகின்றபொழுது, பாரதி, சற்றுக் குனிந்து நடக்கிறவனைப் பார்த்தால் அடே நிமிர்ந்து நட!' என்பார்.

வளைந்து கிடக்கிற மனிதனைப் பார்க்கப் பொறாத மனம். பன்றிப் போத்தை சிங்க ஏறாக்குதல் வேண்டும்' என்கிற மனம். அது மொழி கடந்த மனம். அதனால்தான் அவருக்கு அச்சம் வருகிறது. தான் தமிழன், தான் தமிழன் என்பதை மறுபடியும் மறுபடியும் சொல்லிக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தச் சிறப்பெல்லாம் தமிழுக்கு வந்து சேருதல் வேண்டும். சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே'. இந்தச் சொல்லுக்குப் பழுதில்லை. இங்கே தமிழிலே என்ன சொற்கள் வந்து கலந்த போதிலும் இந்த சமுத்திரம் எல்லாவற்றையும் இழுத்து ஈர்த்து தனக்குள்ளே வயப்படுத்திக் கொள்ளும்.

சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர்' என்றால், எல்லாக் கலாசாரமும் வந்து இங்கு கலக்கட்டும், அந்தச் சவாலை இந்த மொழி ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லுகிற தெம்பு இருந்தது. மெல்லத் தமிழ் இனி சாகும்' என்று அந்தப் பேதை உரைத்தான் என்றான். அது பேதையர் சொல். இங்கு கூறத் தகாதவர்கள் கூறுகின்ற சொல். கொன்றிடல் போலொரு வார்த்தை இங்கு கூறத்தகாதவன் கூறினன் கண்டீர்'.

என்ன விபரீதம்! ஆன்றோர்களும், சான்றோர்களும், புலவர்களும், கற்றோர்களும் இன்று மெத்தத்தான் கவலைப்படுகிறார்கள் தமிழ் செத்துப் போகுமென்று. அது சாகாத மொழி! என்றுமுள தென்றமிழ் என்றும்' என்றால் மூன்று காலம். இது இருந்தது, இருக்கிறது, இருக்கும் என்று சொல்லத் தகுந்த சொரூபம் உடையது.

எனவே, நான் கற்றதெல்லாம் நான் சிந்தித்ததெல்லாம் நான் பெற்றதெல்லாம் பாரதியிடமிருந்துதான். ஒரு வாரிசை இந்த விஷயத்தில் உரியவனே உருவாக்குவதில்லை. அவனுடைய சொற்கள். அவன் வாழ்ந்த வாழ்க்கை. நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்று'. அதனால்தான் பாரதியைப் பற்றி செய்தி பரவுதல் வேண்டும். அது தமிழனைப் பற்றிய செய்தி. தமிழனைப் பற்றிய செய்தி என்றால் அது இந்தியாவின் சிறப்பான சிந்தனையின் சாரம் என்று அர்த்தம்.

தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் - இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத இயல்பினள்

என்று சொல்வது இந்த தேசத்தை மட்டுமல்லஸு இந்த மொழியை. ஆகவே, இந்த மொழியின்பால் அக்கறை கொண்ட அன்பர்கள் வேறு நாடுகளிலும் இருக்கிறார்கள். அவர்கள் வேற்று மொழியிலே வல்லவர்களாகவும் இருக்கிறார்கள். வேறு துறைகளிலே வல்லவர்களாகவும் இருக்கிறார்கள். இதெல்லாம் பாரதியார் கண்ட கனவு. அவர் கனவுகள் எல்லாம் பலித்திருக்கின்றன. அவர் கண்ட கனவு பலித்த யுகத்தில் நாம் வாழ்கிறோம். அன்று பாழ்பட்டு நின்றது பாரதம். தாழ்வுற்று, வறுமைமிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்ற பாரதத்தில் அவர் கனவு கண்டார். இன்றைய பாரதம் உலகுக்கெல்லாம் ஞானதானம் செய்கின்ற நாடாக உயர்ந்திருக்கிறது. பாரதியின் கனவுகள் எல்லாம் பலித்ததன் விளைவு நாம்.

நல்ல சந்ததியினர் பித்ருக்களை மறக்காமல் இருப்பார்கள் என்பது மட்டுமல்ல, பிதுர்க்கடனையும் தவறாமல் நிறைவேற்றுவார்கள். திருலோக சீதாராம் என்ற நண்பர், பாரதி புத்திரர். நாம் எல்லாம் பாரதியின் புத்திரர்கள். பாரதியாருக்கு ஆண் வாரிசு கிடையாது. அது திருலோக சீதாராமுக்கு ரொம்ப வருத்தம் தந்தது. பாரதியார் இறந்த தினத்தில் ஒவ்வொரு ஆண்டும் அவர் பித்ருக்களுக்குச் செய்ய வேண்டிய கடனை நிறைவேற்றி வந்தார்.

நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ இருக்கிறதை நம்புங்கள். கடவுள் இல்லை என்று யோசிப்பவர்களுக்குத்தானே நம்பலாமா கூடாதா என்பது. இருக்கிற எல்லாவற்றிலும் எழுதுகோல் தெய்வம், எழுத்தும் தெய்வம்' என்று எழுத்தாளர்களுக்கெல்லாம் மந்திரம் போல் சொல்லைக் கற்றுத் தந்தவன் மகாகவி பாரதி. எனவே அவன் புகழைப் பாடுவதற்கு நேரம் கிடையாது. காலம் கிடையாதுஸு நாள் கிடையாது.

நமது சுவாசம் பாரதி. நாமெல்லாம் பாரதியின் வாரிசுகள். நான் எப்போதுமே பாரதியின் வாரிசு என்று நானாகவே எண்ணிக் கொண்டிக்கிறேன். எப்படி திருலோக சீதாராம் பிதுர்க்கடன் நிறைவேற்றி தன்னை வாரிசு என்று நினைத்துக் கொண்டாரோ அதுபோல்.

பாரதியார் இட்ட கட்டளைகளை நிறைவேற்றுவோம். அவர் என்ன சொன்னார்? தெளிவாகத் தெரிந்து கொள். அப்புறம் இன்னொருவருக்கு தெளிவு ஏற்படுத்துவதற்காக சொல்லு.

தெளிவுறவே அறிந்திடுதல். தெளிவு பெற மொழிந்திடுதல்'. சொல்லுவதில் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தெளிவு ஏற்பட வேண்டும். புரியாத வி'யங்களெல்லாம் எனக்கு சம்பந்தமல்லாததென்று இந்தக் காலத்திலும் நான் ஒதுக்கிவிடுவேன். அது ரொம்பப் பெரிய விஷயமாக இருக்கலாம். கணக்கு எனக்கு இன்று வரை தெரியாது. ஆனால், இந்தக் கணக்கு இல்லாமல் உலகத்தில் எந்தக் காரியமும் இல்லை என்றறிகிறபோது நான் எதற்குமே லாயக்கற்றவன் என்கிற தாழ்வுணர்ச்சி ஏற்படுகிறது.

பள்ளிக்கூடத்தில் கணக்கு சொல்லிக் கொடுக்கும்போது, மைதானம் எவ்வளவு நீளம், எவ்வளவு அகலம் என்று சொல்லிக் கொடுத்தால் இது ஏண்டா நமக்கு' என்று தோன்றும். நான் எங்கே மைதானத்தை அளக்கப் போகிறேன். நிறுத்தவும், அளக்கவும் விற்கவும் வாங்கவும் கணக்கு வேண்டும். நான் ஏன் கணக்கு படிக்க வேண்டும்? ஒரு கணக்கனுக்கு இவையெல்லாம் வேண்டும். ஒரு விஞ்ஞானிக்கு இதெல்லாம் வேண்டும். அப்புறம் எனக்குத் தோன்றியது. அடடே, பாரதியாரும் நம்ம கேசுதான். அவருக்கும் கணக்கு பிடிக்காதாம். கணக்கு பிணக்கு ஆமணக்கு' என்று எழுதி வைப்பாராம். இப்படி பாரதியாரோடு ஒரு ஒற்றுமை கண்டேன்.

அதற்கு மேலே என்னவென்றால் நம்மை மாதிரியே, வெளியே சொல்ல வெட்கம். இளம் வயதில், அரும்பு மீசை கூட முளைக்காத பருவத்தில் ஒன்பது வயதுப் பொண்ணு மேலே காதல்.

பாரதியார் சொல்கிறார்:

ஒன்பதாய பிராயத்த ளென் விழிக்
கோதுகாதை சகுந்தலை யொத்தனள்
என்ப தார்க்கும் வியப்பினை நல்குமால்
என்செய் கேன்? பழி யென்மிசை யுண்டுகொல்?
அன்பெ னும்பெரு வெள்ளம் இழுக்குமேல்
அதனை யாவர் பிழைத்திட வல்லரே?
முன்பு மாமுனி வோர்தமை வென்றவில்
முன்ன ரேழைக் குழந்தையென் செய்வனே?

என்று பிள்ளைப் பிராயத்தில் நான் படிக்கிறேன். படித்துக் கொண்டே போனால் நம்மை எங்கெங்கோ கொண்டு போகிறது. உலகத்தை எல்லாம் காட்டித் தருகிறது ஒரு சிறு புத்தகம். கிறிஸ்துவர்க்கு எப்படி பைபிளோ, இஸ்லாமியருக்கு எப்படி குரானோ, மார்க்சிஸ்டுகளுக்கு எப்படி தாஸ் காபிடலோ அது போல் தமிழர்களாகிய நம் அனைவருக்கும் கையில் இருக்க வேண்டிய புத்தகம் பாரதியாருடையது.

அதிலே திருக்குறள் இருக்கிறது. அதில் கம்பர் இருக்கிறார். வள்ளுவர் இருக்கிறார். இவர்களைப் பற்றி எல்லாம் பாரதியார் சொல்லவில்லை என்றால் எனக்கு அவர்கள் மீது மரியாதை வந்திருக்காது. இப்படி தானறிந்த, தன்னை உயர்த்திய அனைத்தையும் தன் பிள்ளைகளுக்கு எப்படிப் பெற்றோர் சொல்வார்களோ அது மாதிரி தமிழ்ச் சந்ததியினருக்கு பாரதியார் தந்து போயிருக்கிறார். தமிழ் பேசுகிற, தமிழிலே சிந்திக்கிற அத்தனை பேருமே பாரதியின் வாரிசுகள்தான்!



நன்றி!

*(வ.உ.சி. நூலகம் வெளியிட்ட ஷமகாகவி பாரதியார் கவிதைகள்' நூலில் இடம்பெற்ற எழுத்தாளர் ஜெயகாந்தனின் உரை)*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தீவக மக்களின் கண்ணீரில் நனைந்த படுகொலையின் நினைவிடமான மண்டைதீவுப் படுகொலைகளின் 36 ஆம் ஆண்டு நினைவு கூரல் அனுஸ்டிப்பு

பு. கஜிந்தன்

90 களில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மண்டைதீவு படுகொலையின் 36 ஆவது ஆண்டு நினைவு நாள் 26ம் திகதி புதன்கிழமை அன்று உறவுகளின் கண்ணீருடன், உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.

36 வருடங்களுக்கு முன்னர் இதே தினத்தன்று இலங்கையின் இராணுவத்தால் மண்டைதீவில் நடத்தப்பட்ட படுகொலைச் சாட்சி நினைவிடத்திலேயே இன்றையதினம் தீவக மக்கள் ஒன்றுகூடி தமது உறவுகளை நினைவுகூரி சுடரேற்றி மலர் தூவி அஞ்சலித்தனர்.

தீவக நினைவேந்தல் குழு மற்றும் தீவக முன்னேற்றக்களகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற குறித்த நினைவேந்தல் அனுஸ்டிப்பு நிகழ்வில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட உறவுகளின் வாழும் உறவான ஸ்பன் மற்றில்டா முதன்மைச் சுடரேற்றிவைத்து நினைவு நினைவு கூரலை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து அருட்தந்த வசந்தன், மற்றும் தீவக முன்னேற்றக் கழக தலைவர் பிர-கலாதன் ஆகியொரால் நினைவிடத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்விவேந்தல் நடைபெற்றது.

தொடர்ந்து உருவப்படங்களுக்கு உறவுகளால் மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் மண்டைதீவு பங்குத்தந்தை அலோய் அருணேஷகும்மார், அருட்தந்த வசந்தன், அருட்சகோதரிகள், வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சி.அசோக்குமர், பிரதேச சபை உறுப்பினர்களான கருணாகரன் நாவலன், அனுசியா ஜெயகாந்த், மற்றும், ஜோசம் கனிஸ்டன் பொதுமக்கள் என பலரும் மலர்தூவி அஞ்சலித்தனர்.

முன்பதாக 1990 ஆம் ஆண்டு பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பகுதி-







களைச் சேர்ந்த 80 இற்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் காணாமலாக்கப்பட்டிருந்ததுடன் மேலும் பலர் கொல்லப்படும் இருந்தனர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உடலங்கள் மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் குறிப்பிட்ட சில கிணறுகளில் இருப்பதாகவும் அதற்கான வாழும் சாட்சியங்கள் இருப்பதாகவும் பல்வேறு தரப்பினரும் கூறிவரும் நிபையில் குறித்த சம்பவத்தில் தனது மகனை பறிகொடுத்த 81 வயதுடைய ஸ்ரிபன் மரில்டா, மற்றும் வேலணை பிரதேச சபையின் உறுப்பினரும் தீவக முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான சுவாமிநாதன் பிரகலாதன் ஆகியோரால் இதற்கான தீர்வுகோரி ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன.

இதேநேரம் குறித்த சம்பவம் குறித்து வாழும் சாட்சியாக இருக்கும் படுகொலைசெய்யப்பட்ட ஒருவரது தாயாரும் சகோதரியும் அன்றைய நாள் வடுக்களையும் வேதனைகளையும் சாட்சியாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

இதன்போது மகன இழந்த தாயார் கூறுகையில், 1990.08.25 மற்றும் 26 ஆம் திகதிகளில் இந்த படுகொலையும் காணாமலாக்கலும் இராணுவத்தால் அரங்கேற்றப்பட்டது.

இதில் தனது மகன் இராணுவத்தால் என் கண் முன்னே கைது செய்யப்படு எனது உறவினர் ஒருவரது வீடின் பின் பகுதியில் வைத்து கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கினர்.

அதன் பின்னர் அவர்களை சுட்டுக் கொன்றனர். இந்த கோர சம்பவத்துக்கு நான் சாட்சி. அதேபோன்று சுற்றுவட்டத்தில் இவ்வாறு கொல்லப்பட்ட பல உடலங்களை சிலவற்றை அவ்வூர் மக்களைக்கொண்டு சேகரித்து கிணறுகளில் போட்டு மூடினர்.

அவ்வாறு புதைக்கப்பட்ட கிணறுகளில் ஒன்றுதான் இன்று நினைவு கூறப்படும் கிணறு. இந்த கிணறு போன்று இன்னும் சில கிணறுகள் இன்னும் இருக்கின்றன என கண்ணீர் மல்க தெரிவித்தார்.

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
1211



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## திருமங்கலாய் சிவன் கோவில்
### திருக்கரைசையம்பதி, திருகோணமலை

தலபுராணம் என்பது வரலாற்றிற்குச் சமமானதாகக் கருதக்கூடிய பல விடயங்களைத் தன்னகத்தே அடக்கிக் காணப்படும். ஆலயத்தின் அமைவு, ஆலயத்தின் சிறப்பு, ஆலயம் சார்ந்த நிலப்பரப்பு, அந்நிலப்பரப்பிலே வாழ்ந்த மக்களின் பண்பாடு, நாகரீகம், போன்ற பல விடயங்களைத் தலபுராணங்கள் தன்னகத்தே கொண்டு காணப்படும். இத்தலபுராணங்களை கற்றறிந்த சான்றோர்கள் இயற்றுவதால் அவற்றிலே தெளிவு காணப்படும்.

திருமங்கலாய் சிவன்கோவில் என்ன காரணத்தாலோ அழிவுற்றபோதிலும், இவ்வாலயத்தின் ஆரம்பமும், அதன் சிறப்பும் இவ்வாலய தலபுராணமாகிய திருக்கரைசைப் புராணத்தின் மூலம் கிடைத்திருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும். புராணம் என்றால் கட்டுக்கதை என்ற கருத்து மக்களிடையே நிலவுகின்றது. இக் கருத்து தவறானதாகும். புராணம் என்பது புராதனமானது. தொன்மையானது என்ற கருத்துடையது.

வரலாறு உள்ளதை உள்ளபடி உரைக்கும்போது, புராணங்கள் வரலாற்றோடு வர்ணனைகளையும் சேர்த்து சேர்த்துக்கூறுவதால், மக்களிடையே இவ்வாறான எண்ணம் தோன்றியிருக்கலாம். இவ்வாறான தலபுராணங்களைப் பேணிக்காப்பது, சைவமக்களுடைய ஆதி வாழ்விடங்களையும், அவர்கள் பேணி வளர்த்த ஆலயங்களையும் அதன் சிறப்புக்களையும் அறிய வாய்ப்பளிக்கும். திருமங்கலாய் சிவன்கோவிலுக்குரிய திருக்கரசைப்புராணம், கொட்டியாபுரப்பற்றிலுள்ள பல ஆலயங்களிலே இன்றும் படிக்கப்பட்டு வருகின்றது.

திருமங்கலாய் சிவன்கோவில் தலபுராணக் குறிப்புக்களிலிருந்து திருமங்கலாய் சுவாமி பெயர் கந்தலிங்கேஸ்வரர் என அறியமுடிகின்றது.. இவ்வாலயத்திலே முக்கியமான இரு தீர்த்த தினங்கள் காணப்பட்டுள்ளன. திருமங்கலாய் சிவன் கோவிலில் இருந்து சுவாமி எழுந்தருளி, மகாவலிகங்கையில் ஆடி அமாவாசை அன்றும், மகரமாதத்திலும் தீர்த்தமாடுவார். இவ்வாலயம் அழிவுற்றபின்னர் இந்த வழமையின்படி கங்குவேலி சிவனும், தம்பலகாமம் கோ-ணசரும் மகாவலி கங்கையிலே தீர்த்தமாடுவது வழக்கம்.

திருமங்கலாய் சிவன்கோவிலுக்குரிய திருக்கரைசைப் புராணம் இவ்வாலயத்தின் தொன்மையையும், சிறப்பையும் எடுத்துக் கூறுகின்றது. இலங்கையின் கிழக்குப் பிரதேசங்களிலே தமிழ் மன்னர்கள் பன்னெடுங் காலமாத்திற்கு முன்பே அரசாட்சி செய்துள்ளார்கள் என்ற செய்தியை திருக்கரசைப் புராணம் கூறுகின்றது. அக்காலத்தில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் மன்னர்களும், யாத்திரிகர்களும், வியா-பாரிகளும் சர்வசாதாரணமாகச் வருவதும் போவதும் நிகழ்ந்துள்ளது.

இந்தியாவிலிருந்து மன்னர் பரம்பரையைச் சேர்ந்த சிங்கபூதரன் என்பவன், அயோத்தியிலிருந்து இலங்கைக்கு வந்தான். தற்போது இலங்கைத்துறை என்று சொல்லப்படும் இடத்தில் கப்பலில் வந்திறங்கினான். அப்போது இப்பிரதேசத்தை எழில்வேந்தன் என்னும் அரசன் ஆண்டுகொண்டிருந்தான். இவனுடைய மகள் பெயர் திருமங்கை. திருமங்கையை சிங்கபூதரன் திருமணம் செய்து, எழில்வேந்தனுக்குப் பின், திருக்கரைசையம்பதியில் அரண்மனை அமைத்து ஆட்சி செய்துள்ளான். அரண்மனை அமைத்த இடத்திற்கு இரணியன்குன்று என்று பெயர்.

இப்பெயர் திரிபுபட்டு இரணியன் கொட்டு என்று வழங்கப்படுகின்றது. சிங்கபூதரனும், திருமங்கையும் சோந்து அமைத்த கோவிலே திருமங்கலாய் சிவன்கோவில் என்று வழங்கபப்ட்டது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் முறையே பொருந்திச் சிறந்து விளங்கிய திருமங்கலாய் சிவன்கோவில், மகாவலிகங்கையின் பெருவெள்ளப் பெருக்கினால் அழிந்திருக்கலாம் என்றும், பின்னர் காடுவளர்ந்து மூடியிருக்கலாமென்றும் ஒரு கருத்து நிலவுகின்றது. இவ்வாறு காடு வளாந்து மூடியிருந்த காலத்தில், ஸ்ரீ தியாகராசக் குருக்கள் என்பவர், ஆலயத்திலிருந்த லிங்கத்தையும், அம்பாளையும் எடுத்துவந்து வெருகலம்பதியில் ஒரு சிறு கோவில்கட்டி வணங்கி வந்துள்ளார்.

இக்கோவிலும் பராமரிப்பாரின்றி அழிவுற்றிநிலையில், இந்தத் திருவுருவங்கள் மூதூரிலுள்ள பிள்ளையார் கோவிலில் வைக்கப்பட்டுள்ளது. சுமார் மூன்றடி உயரமான லிங்கமும், அம்பாளும் சிறிது பின்னப்பட்டிருந்தபோதிலும், மிக அழகிய திருவுருவங்களாகக் காணப்படுகின்றன. திருமங்கலாய் ஆலயத்திற்குரிய மணியொன்று கங்குவேலிச் சிவன் கோவிலில் இருக்கின்றது.

வரலாற்றுப் பெருமைமிக்க இவ்வாலயம், பழுதடைந்து காணப்படுகின்றது. ஆயினும் ஆலயச் சிதைவுகளைத் தேடியெடுத்து ஒழுங்குபடுத்திப் பாதுகாத்த பெருமை திரு.க.செல்லத்துரை சாமியாரைச் சார்ந்ததாகும். ஒரு காலத்தில் வரல-ாறு மீண்டு தமிழ்மக்கள் கோலோச்சும் காலத்தில், வரலாற்றுப் பெருமைமிக்க ஆலயங்கள் யாவும் தமது உன்னத நிலையை மீண்டும் பெறும் வாய்ப்பு ஏற்படும். “ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும், வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும்” என்பதற்கிணங்க, “குடைநிழல் இருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்து நண்ணினும் நண்ணுவர்” என்பதை மனதிருத்தி, எமது வரலாறு மீண்டும் எழுச்சிபெற்று, அதன் மூலம் தமிழ் மக்கள் வாழ்வும், அவர்கள் போற்றிப் பேணும் ஆலயங்களும் புதுப்பொலிவு பெறும். இது காலத்தின் நியதி என்பதை மனதிருத்திருத்துவதே பொருத்தமுடையது.

வளரும்..

கனடிய செய்திகள் Canadian News

# கனடாவில் எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள இரண்டாவது உலகத் தொல்காப்பிய மாநாடு





## "எதிர்காலச் சந்ததியினருக்குத் தொல்காப்பியத்தைக் கடத்துதல்" என்கின்ற நல்ல நோக்குடன் திட்டமிடப்பெறுகிறது

**- த. சிவபாலு, B.Ed. Hons. (Cey.), M.A. in Ed. (Jaf.)**

***(எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள இரண்டாவது உலகத் தொல்காப்பிய மாநாட்டை முன்னிட்டு எழுதப்பட்ட கட்டுரை.)***

தொல்காப்பியம் என்றாலே முதலில் நம் நினைவுக்கு வருவது தமிழ் இலக்கண நூல் என்பதே. ஆனால், தொல்காப்பியத்தை நவீன மொழியியல் நோக்கில் அணுகிப் பார்க்கும்போது, அது வெறும் இலக்கண நூல் மட்டுமல்ல என்பது தெளிவாகிறது. வள்ளுவருக்கும் முற்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில், மொழியின் இலக்கணம் மட்டுமன்றி, எழுத்துகளின் ஒலி அமைப்பு, உச்சரிப்பு முறை, சொற்களின் அமைப்பு, மனித வாழ்வியல் மற்றும் பண்பாடு ஆகியவை குறித்த ஆழமான சிந்தனைகளும் இடம்பெற்றுள்ளன.



குறிப்பாக, எழுத்ததிகாரத்தில் இடம்பெறும் ஒலியியல் சார்ந்த கருத்துகளும், சொல்லதிகாரத்தில் காணப்படும் மொழியமைப்புக் கோட்பாடுகளும், தொல்காப்பியரின் மொழியியல் பார்வையின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றன. இக்கருத்துகளை நவீன மொழியியல் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதற்கான வாய்ப்புகளும் இன்று பெருகியுள்ளன.

இந்தப் பெருமைமிக்க தொல்காப்பிய மரபை எதிர்காலச் சந்ததியினரிடம் எடுத்துச் செல்லும் நோக்குடன், "எதிர்காலச் சந்ததியினருக்குத் தொல்காப்பியத்தைக் கடத்துதல்" என்ற கருப்பொருளில் இரண்டாவது உலகத் தொல்காப்பிய மாநாடு எதிர்வரும் செப்டம்பர் 19, 20 ஆகிய திகதிகளில் கனடாவின் ஒன்ராறியோ மாநிலத்தில் உள்ள Bill Hogarth Secondary School, 100 Donald Sim Avenue, Markham, ON L6B 0R1 என்ற இடத்தில் நடைபெறவுள்ளது.

உலகெங்கும் தமிழ்மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டின் மீது அக்கறையும் பற்றும் கொண்ட அனைவரையும் ஒன்றிணைக்கும் வகையில், இம்மாநாட்டை கனடா தொல்காப்பிய மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

இம்மாநாட்டிற்காக உலகின் பல பகுதிகளிலிருந்தும் பேராளர்களால் 350-க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆய்வரங்குகளுக்கு மேலாக, மாணவர்களுக்கான வினாடி-வினாப் போட்டிகள், தொல்காப்பியம் தொடர்பான பல்வேறு காட்சிப்படுத்தல்கள், நடனங்கள், உரைகள், பெரியவர்களுக்கான வினா-விடைப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. குறிப்பாக, "மாணவர்களுக்கான தொல்காப்பியம்" என்ற கருப்பொருளில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளையும் இடம்பெறச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### கனடா தொல்காப்பிய மன்றத்தின் பயணம்

கனடா தொல்காப்பிய மன்றம் 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 2016ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் பேராசிரியர்கள் மு. இளங்கோவன், இ. பாலசுந்தரம், நா. சுப்பிரமணியன், சுப்பராயன் பசுபதி உள்ளிட்ட அறிஞர்கள் கலந்துகொண்டு உரையாற்றிச் சிறப்பித்தனர்.

இதன் தொடர்ச்சியாக, 2024ஆம் ஆண்டு முதலாவது உலகத் தொல்காப்பிய மாநாடு சிறப்பாக நடத்தப்பட்டது. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பேராசிரியர் மு.இளங்கோவன் உட்பட பல அறிஞர்களும் ஆய்வாளர்களும் பேராளர்களாகக் கலந்துகொண்டு தமது ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

அந்தப் பணியின் தொடர்ச்சியாக நடைபெறவுள்ள இம்மாநாடு, தொல்காப்பியத்தைப் பண்டிதர்களின் ஆய்வுப் பொருளாக மட்டுப்படுத்தாமல், அடுத்த தலைமுறையினருக்கும் குறிப்பாக சிறார்களுக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தை முன்னிறுத்துகிறது.

### தொல்காப்பியத்தைக் கற்பதன் பயன் என்ன?

தொல்காப்பியத்தைக் கற்பதன் அடிப்படைப் பயன் தமிழ்மொழியை ஆழமாகப் புரிந்துகொள்வதிலும், தமிழர்களின் பண்பாட்டு மரபையும் வாழ்வியல் சிந்தனைகளையும் அறிந்துகொள்வதிலும் உள்ளது.

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டிருப்பதைப் போல, தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இதில் எழுத்ததிகாரம் மொழியின் ஒலி மற்றும் எழுத்து அமைப்பை விளக்குகிறது. சொல்லதிகாரம் சொற்களின் அமைப்பு மற்றும் பயன்பாட்டை ஆராய்கிறது. பொருளதிகாரம் மனித வாழ்வியல், பண்பாடு, உணர்வுகள், சமூக அமைப்பு, இயற்கைச் சூழல் போன்ற பல்வேறு அம்சங்களை விரிவாக எடுத்துரைக்கிறது.

இதனால் தொல்காப்பியம் வெறும் இலக்கண நூலாக மட்டுமல்லாமல், தமிழர்களின் மொழி, பண்பாடு, வாழ்வியல், இலக்கியச் சிந்தனை ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கான ஒரு முக்கியமான அறிவுக் கருவூலமாகவும் விளங்குகிறது.

### தொல்காப்பிய மாநாடுகளின் முக்கியத்துவம்

தொல்காப்பியத்தை மையமாகக் கொண்டு உலகளாவிய மாநாடுகள் நடத்தப்படுவதன் மூலம் தமிழ் மொழிக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன.

1. தமிழ் மொழியின் தொன்மையையும் சிறப்பையும் உலகிற்கு எடுத்துரைத்தல்

தொல்காப்பியம் தமிழின் தொன்மையான இலக்கண மரபின் முக்கியச் சான்றாகும். அதன் இலக்கணச் செறிவையும், மொழியமைப்பு குறித்த நுட்பமான பார்வையையும், மனித வாழ்க்கையை அகம், புறம் எனப் பகுத்துப் பார்க்கும் தனித்துவத்தையும் உலகளாவிய அறிஞர்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு இம்மாநாடுகள் உதவுகின்றன.

2. புதிய ஆய்வுகளுக்கும் திறனாய்வுகளுக்கும் வாய்ப்பு

உலகின் பல பகுதிகளிலிருந்தும் தமிழ் அறிஞர்கள், மொழியியலாளர்கள், இலக்கிய ஆய்வாளர்கள் ஒரே தளத்தில் கூடும்போது, தொல்காப்பியம் குறித்த புதிய ஆய்வுக் கோணங்கள் உருவாகின்றன. பழைய உரைகள் மறுபரிசீலனை செய்யப்படுவதுடன், புதிய விளக்கங்களும் திறனாய்வுகளும் தோன்றுகின்றன.

மேலும், தொல்காப்பியக் கோட்பாடுகளை நவீன மொழியியல் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதற்கும் இம்மாநாடுகள் சிறந்த தளமாக அமைகின்றன.

3. அடுத்த தலைமுறையினரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

இன்றைய இளைஞர்களும் மாணவர்களும் தொல்காப்பியத்தின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்வது மிகவும் அவசியமானது. தொல்காப்பியம் கடினமான இலக்கண நூல் என்ற எண்ணத்தை மாற்றி, அதில் அடங்கியுள்ள மொழியியல், இலக்கியம், இயற்கை, பண்பாடு மற்றும் வாழ்வியல் சிந்தனைகளை எளிமையான முறையில் இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்ல வேண்டும்.

4. பன்னாட்டு உறவுகளையும் மொழிபெயர்ப்பையும் வளர்த்தல்

உலகளாவிய மாநாடுகள் மூலம் தொல்காப்பியத்தை ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், இந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் அறிமுகப்படுத்தவும் மொழிபெயர்க்கவும் வாய்ப்புகள் உருவாகின்றன. இதன் மூலம் தமிழ் மொழியின் செவ்வியல் தன்மையும் அதன் அறிவியல் மற்றும் இலக்கியச் செழுமையும் உலகளாவிய அளவில் மேலும் அறியப்படலாம்.

5. கணினி மொழியியல் மற்றும் செய்யறிவு

இன்றைய தொழில்நுட்ப உலகில் தொல்காப்பியத்தின் மொழியியல் கோட்பாடுகளை கணினி மொழியியல் (Computational Linguistics) மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற துறைகளுடன் இணைத்து ஆராய்வதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன.

தொல்காப்பியத்தின் இலக்கண விதிகளைத் தரவாக்கம் செய்து, தமிழ் மொழியைப் புரிந்துகொள்ளும் கணினி அமைப்புகள், மொழிபெயர்ப்பு கருவிகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த மொழித் தொழில்நுட்பங்களில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதும் எதிர்கால ஆய்வுகளுக்குரிய முக்கியத் துறையாகும்.

### தொல்காப்பிய ஆய்வுகள் வெளிப்படுத்தும் பல்வேறு பரிமாணங்கள்

தொல்காப்பிய ஆய்வுகள் தமிழ் மொழியின் தொன்மையை மட்டும் எடுத்துரைப்பதில்லை. அவை தமிழர்களின் சிந்தனை, வாழ்வியல் மற்றும் பண்பாட்டின் பல்வேறு பரிமாணங்களையும் வெளிக்கொணர்கின்றன.

### உலகளாவிய பழமையும் தொடர்ச்சியும்

தமிழர்களின் மொழி அமைப்பும் இலக்கிய மரபும் மிகப் பழமையான காலத்திலேயே செம்மையான கட்டமைப்பைப் பெற்றிருந்ததைத் தொல்காப்பியம் எடுத்துக்காட்டுகிறது.

மேலும், மொழியையும் மனித வாழ்வியலையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்காமல் அணுகும் தமிழரின் தனித்துவமான சிந்தனையையும் இது வெளிப்படுத்துகிறது.

### நவீன மொழியியலுக்கான வழிகாட்டி

தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம் மற்றும் சொல்லதிகாரம் ஆகியவற்றில் காணப்படும் பல கருத்துகள் இன்றைய ஒலியியல் (Phonetics), ஒலியனியல் (Phonology), சொல்லியல் (Morphology), தொடரியல் (Syntax) போன்ற மொழியியல் துறைகளுடன் ஒப்பிட்டு ஆராயத்தக்கவையாக உள்ளன.

மனிதன் ஒலிகளை உருவாக்குவதில் தொண்டை, நாக்கு, இதழ் போன்ற உறுப்புகளின் பங்களிப்பைத் தொல்காப்பியர் விளக்கியிருப்பது அவரது நுண்ணிய மொழியியல் பார்வையை எடுத்துக்காட்டுகிறது.

### திணைக் கோட்பாடும் சூழலியலும்

தொல்காப்பியத்தின் ஐந்திணைக் கோட்பாடு-குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை-வெறும் நிலப்பரப்பைப் பகுத்துக் காட்டும் முறையல்ல. நிலம், காலம், இயற்கை, மனித உணர்வு, தொழில், வாழ்வியல் ஆகியவற்றை ஒன்றோடொன்று இணைக்கும் ஒரு விரிவான வாழ்வியல் பார்வையாகவும் அது விளங்குகிறது.

இன்றைய சூழலியல் சிந்தனைகளின் பின்னணியில் ஐந்திணைக் கோட்பாட்டை மீளாய்வு செய்வது குறிப்பிடத்தக்க புதிய ஆய்வுத் துறையாக அமையக்கூடும்.

*(தொடர்ச்சி 19 பக்கம்)*

# இவ்வார ராசிபலன்

**28-08-2026 வெள்ளி தொடக்கம் 03-09-2026 வியாழன் வரையும்**


ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்
ஸ்தாபகர்
ஜெய் ப்ரத்யங்கிரா பீடம்
40.வெண்பாக்கம் கிராமம், சிங்கப்பெருமாள் கோவில்ரயில் வேகேட் (வழி), வெங்கடாபுரம் (அஞ்சல்), செங்கல்பட்டு (மா)- 603204.
தொடர்புக்கு WhatsApp: +917788994666

**மேஷம்:** உங்கள் தன்னம்பிக்கையும் துணிச்சலும் பல நல்ல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து, நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த முயற்சிகள் வெற்றியடையும். மேலதிகாரிகளின் பாராட்டும், முக்கிய பொறுப்புகளும் கிடைக்கக்கூடும். பணவரவு சீராக இருந்து, தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். புதிய முதலீடுகள் குறித்து சிந்திக்கும் வாய்ப்பும் உருவாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, குடும்ப ஒற்றுமை வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை தரும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி, இனிமையான தருணங்கள் அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு மற்றும் தூக்கமின்மை ஏற்படலாம். சத்தான உணவு மற்றும் போதுமான ஓய்வில் கவனம் செலுத்துங்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு, போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.
*அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, ஆரஞ்சு. அதிர்ஷ்ட எண்: 1,9.*
*அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், ஞாயிறு. இந்த வாரம் மேஷத்திற்கு 9/10 மதிப்பெண்.*

**ரிஷபம்:** பொறுமையும் விடாமுயற்சியும் உங்களை வெற்றிப் பாதையில் முன்னேற்றும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்திருந்த முன்னேற்றம் கிடைத்து, புதிய வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். உங்கள் உழைப்புக்கு உரிய அங்கீகாரம் கிடைத்து, மேலதிகாரிகளின் ஆதரவும் அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாக இருந்து, பழைய பாக்கிகள் வசூலாகி பொருளாதார நிலை வலுப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, உறவு மேலும் வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையை அளிக்கும். காதல் உறவுகளில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டு, எதிர்காலம் குறித்த முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு இருக்காது என்றாலும், உணவுப் பழக்கத்தில் கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்கள் கல்வியில் முழு கவனத்துடன் செயல்பட்டு எதிர்பார்த்த வெற்றியைப் பெறுவார்கள். செலவுகளை திட்டமிட்டு கட்டுப்படுத்தினால் இந்த வாரம் பல நன்மைகளை அனுபவிப்பீர்கள்.
*அதிர்ஷ்ட நிறம்: பச்சை, வெள்ளை. அதிர்ஷ்ட எண்: 2,6.*
*அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, புதன். இந்த வாரம் ரிஷபத்திற்கு 8.5/10 மதிப்பெண்.*

**மிதுனம்:** சுறுசுறுப்பும் புத்திசாலித்தனமும் உங்களுக்கு புதிய வெற்றிகளைப் பெற்றுத் தரும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய பொறுப்புகள் கிடைத்து, உங்கள் திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்புகள் உருவாகும். மேலதிகாரிகளின் பாராட்டும், சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த ஒரு நல்ல செய்தி மன மகிழ்ச்சியை அளிக்கும். பணவரவு சீராக இருந்து, எதிர்பாராத வருமானமும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே நல்ல புரிதல் உருவாகி, உறவு மேலும் வலுப்படும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஆதரவு மன உற்சாகத்தை அதிகரிக்கும். காதல் உறவுகளில் இருந்த குழப்பங்கள் நீங்கி நெருக்கம் அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக அலைச்சலால் உடல் சோர்வு ஏற்படலாம். போதுமான ஓய்வும் தூக்கமும் அவசியம். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு போட்டித் தேர்வுகளில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். முக்கிய முடிவுகளை நிதானமாக எடுத்தால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக நடைபெறும்.
*அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, மஞ்சள். அதிர்ஷ்ட எண்: 5,9.*
*அதிர்ஷ்ட நாள்: புதன், ஞாயிறு. இந்த வாரம் மிதுனத்திற்கு 9/10 மதிப்பெண்.*

**கடகம்:** மன அமைதியும் குடும்ப மகிழ்ச்சியும் உங்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்திருந்த முன்னேற்றம் கிடைத்து, புதிய பொறுப்புகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள். நீண்ட நாட்களாக தடைபட்டிருந்த காரியங்கள் சாதகமாக முடிந்து மனநிறைவை அளிக்கும். பணவரவு சீராக இருந்து, எதிர்பாராத வருமானமும் கிடைத்து பொருளாதார நிலை வலுப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரித்து, குடும்ப ஒற்றுமை மேலும் வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையையும் மகிழ்ச்சியையும் தரும். காதல் உறவுகளில் இருந்த சிறிய மனவருத்தங்கள் நீங்கி உறவு இனிமையாக மாறும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், செரிமானம் மற்றும் வயிறு தொடர்பான விஷயங்களில் கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு எதிர்பார்த்த மதிப்பெண்களைப் பெறுவார்கள். பொறுமையுடனும் நிதானத்துடனும் செயல்பட்டால் இந்த வாரம் பல நல்ல வாய்ப்புகள் உங்கள் வாழ்க்கையில் அமையும்.
*அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, இளம்பச்சை. அதிர்ஷ்ட எண்: 2,7.*
*அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன். இந்த வாரம் கடகத்திற்கு 8.5/10 மதிப்பெண்.*

**சிம்மம்:** தன்னம்பிக்கையும் தலைமைத்துவ திறமையும் உங்களுக்கு வெற்றிகளை குவிக்கும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து, உங்கள் உழைப்புக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், முக்கியமான பொறுப்புகளும் உங்களைத் தேடி வரும். பணவரவு திருப்திகரமாக இருந்து, எதிர்பாராத லாபமும் கிடைத்து மனநிம்மதியை அளிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிகழ்வுகள் நடைபெற வாய்ப்புள்ளது. கணவன்-மனைவி இடையே அன்பும் ஒற்றுமையும் அதிகரித்து, குடும்ப உறவுகள் வலுப்படும். பிள்ளைகளின் சாதனைகள் பெருமையை ஏற்படுத்தும். காதல் உறவுகளில் இனிமையான மாற்றங்கள் உருவாகி, எதிர்காலம் பற்றிய நல்ல முடிவுகள் எடுக்கப்படலாம். உடல்நலத்தில் பெரிய பிரச்சினைகள் இருக்காது என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு ஏற்படலாம். போதுமான ஓய்வும் உடற்பயிற்சியும் அவசியம். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். தற்பெருமையைத் தவிர்த்து அனைவருடனும் இணக்கமாக நடந்துகொண்டால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறும்.
*அதிர்ஷ்ட நிறம்: தங்க மஞ்சள், ஆரஞ்சு. அதிர்ஷ்ட எண்: 1,3.*
*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, செவ்வாய். இந்த வாரம் சிம்மத்திற்கு 9/10 மதிப்பெண்.*

**கன்னி:** திட்டமிட்ட செயல்பாடுகள் நல்ல பலனைத் தரும் வாரமாக இந்த வாரம் அமையும். பணியிடத்தில் உங்கள் உழைப்பிற்கும் திறமைக்கும் உரிய அங்கீகாரம் கிடைத்து, புதிய பொறுப்புகள் வழங்கப்படலாம். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த வேலைகள் வெற்றிகரமாக முடிவடையும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் உருவாகி லாபம் அதிகரிக்கும். பணவரவு சீராக இருந்தாலும் தேவையற்ற செலவுகளைத் தவிர்த்து சேமிப்பில் கவனம் செலுத்துவது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரிக்கும். உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் முழு கவனம் செலுத்தினால் சிறந்த முன்னேற்றம் காண்பார்கள். உடல்நலத்தில் செரிமானம் தொடர்பான சிறிய பிரச்சினைகள் அல்லது உடல் சோர்வு ஏற்படலாம் உணவு முறையிலும் ஓய்விலும் கவனம் செலுத்துங்கள். எந்த முடிவையும் அவசரப்படாமல் நிதானமாக எடுத்தால் வெற்றி உறுதி.
*இந்த வாரம் பச்சை நிறம் அதிர்ஷ்டத்தை தரும். அதிர்ஷ்ட எண்: 5.*
*அதிர்ஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி. இந்த வார மதிப்பெண்: 88/100.*

**துலாம்:** சமநிலையும் சாதனைகளும் நிறைந்த வாரமாக இந்த வாரம் அமையும். பணியிடத்தில் உங்கள் முயற்சிகளுக்கு நல்ல அங்கீகாரம் கிடைக்கும். புதிய பொறுப்புகள் வந்தாலும் அதை திறமையாகச் சமாளித்து பாராட்டைப் பெறுவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய தொடர்புகள் லாபத்தை அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும். வாழ்க்கைத்துணையுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் குறைந்து அன்பு அதிகரிக்கும். மாணவர்கள் கவனத்தை சிதறவிடாமல் படிப்பில் ஈடுபட்டால் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். உடல்நலத்தில் சிறிய சோர்வு அல்லது தலைவலி ஏற்படலாம் போதிய ஓய்வு அவசியம். முதலீடு செய்வதற்கு முன் அனுபவம் வாய்ந்தவர்களின் ஆலோசனையைப் பெறுவது நல்லது.
*இந்த வாரம் வெள்ளை நிறம் அதிர்ஷ்டத்தை தரும். அதிர்ஷ்ட எண்: 6.*
*அதிர்ஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி. இந்த வார மதிப்பெண்: 88/100.*

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையும் வெற்றியும் அதிகரிக்கும் வாரமாக இந்த வாரம் அமையும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது. பணியிடத்தில் உங்கள் உழைப்பிற்கு உரிய அங்கீகாரம் கிடைத்து பதவி உயர்வு அல்லது புதிய வாய்ப்புகள் உருவாகலாம். தொழில் மற்றும் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணவரவு சிறப்பாக இருந்தாலும் தேவையற்ற செலவுகளை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் நிலவும். உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். உடல்நலத்தில் பழைய பிரச்சினைகள் குறைந்து புத்துணர்ச்சி ஏற்படும். முக்கியமான முடிவுகளை நிதானமாக எடுத்தால் எதிர்பார்த்த பலன் கிடைக்கும்.
*இந்த வாரம் அடர் சிவப்பு நிறம் அதிர்ஷ்டத்தை தரும். அதிர்ஷ்ட எண்: 9.*
*அதிர்ஷ்ட நாட்கள்: செவ்வாய், ஞாயிறு. இந்த வார மதிப்பெண்: 90/100.*

**தனுசு:** தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் வளர்ச்சியும் புதிய வாய்ப்புகளும் நிறைந்த வாரமாக இந்த வாரம் அமையும். பணியிடத்தில் உங்கள் திறமை வெளிப்பட்டு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். வேலை தேடுபவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் கிடைத்து வருமானம் அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாக இருந்தாலும் சேமிப்பில் கவனம் செலுத்துவது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியான நிகழ்வுகள் நடைபெறலாம். வாழ்க்கைத்துணையுடன் அன்பும் புரிதலும் அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் முழு கவனம் செலுத்தினால் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். உடல்நலத்தில் சிறிய சோர்வு அல்லது தூக்கமின்மை ஏற்படலாம் போதிய ஓய்வு அவசியம். பயணங்கள் சாதகமான பலன்களைத் தரும்.
*இந்த வாரம் மஞ்சள் நிறம் அதிர்ஷ்டத்தை தரும். அதிர்ஷ்ட எண்: 3.*
*அதிர்ஷ்ட நாட்கள்: வியாழன், ஞாயிறு. இந்த வார மதிப்பெண்: 89/100.*

**மகரம்:** பொறுமையும் விடாமுயற்சியும் நல்ல பலனைத் தரும் வாரமாக இந்த வாரம் அமையும். நீண்ட நாட்களாக தடைபட்டிருந்த வேலைகள் மீண்டும் வேகம் பெறும். பணியிடத்தில் உங்கள் நேர்மையும் உழைப்பும் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் திட்டமிட்ட செயல்பாடுகள் லாபத்தை அதிகரிக்கும். பணவரவு சீராக இருக்கும். குடும்பத்தில் அமைதியான சூழல் நிலவும். பெற்றோரின் ஆதரவும் ஆசீர்வாதமும் கிடைக்கும். மாணவர்கள் திட்டமிட்டு படித்தால் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். உடல்நலத்தில் மூட்டு வலி அல்லது உடல் சோர்வு இருந்தால் அலட்சியம் செய்யாமல் கவனித்துக் கொள்ளுங்கள். புதிய முதலீடுகளை நிதானமாக ஆராய்ந்து முடிவு செய்வது நல்லது.
*இந்த வாரம் நீல நிறம் அதிர்ஷ்டத்தை தரும். அதிர்ஷ்ட எண்: 8.*
*அதிர்ஷ்ட நாட்கள்: சனி, புதன். இந்த வார மதிப்பெண்: 88/100.*

(தொடர்ச்சி 20 பக்கம்)

*(17 பக்கத் தொடர்ச்சி)*

# கனடாவில் எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள இரண்டாவது உலகத் தொல்காப்பிய மாநாடு

தமிழ்ச் சமூகமும் பண்பாடும்

தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் வழியாக அக்காலத் தமிழர்களின் நிலவியல் அறிவு, தொழில் முறைகள், உறவுமுறைகள், காதல் மற்றும் திருமண மரபுகள், சமூகப் பழக்கவழக்கங்கள், அரசியல் மற்றும் அறவியல் சிந்தனைகள் போன்ற பல்வேறு அம்சங்களைப் புரிந்துகொள்ள முடிகிறது.

இலக்கியத் திறனாய்வும் கோட்பாடுகளும்

மெய்ப்பாட்டியல், உவமவியல் உள்ளிட்ட பகுதிகள் தமிழரின் தனித்துவமான இலக்கியச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றன. மனித உணர்வுகளின் வெளிப்பாடு, காட்சிப்படுத்தல், உவமை மற்றும் இலக்கிய அழகியல் ஆகியவற்றைத் தொல்காப்பியர் முறையாக வகைப்படுத்தியிருப்பது இலக்கியத் திறனாய்வில் குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும்.

இதனால் தொல்காப்பிய ஆய்வுகள், "தமிழ் மொழி வெறும் தொடர்புச் சாதனம் மட்டுமல்ல் அது தமிழர்களின் பண்பாட்டு செழுமை, வாழ்வியல் அறம் மற்றும் அறிவியல் பூர்வமான சிந்தனையின் கருவூலம்" என்ற உண்மையை உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றன.

சிறார்களிடம் தொல்காப்பியத்தைக் கொண்டு செல்லுதல்:

தொல்காப்பியம் பண்டிதர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் மட்டுமே உரிய நூல் என்ற எண்ணத்தை மாற்றுவது காலத்தின் தேவையாகும். குறிப்பாக, எதிர்காலச் சந்ததியினரிடம் இதன் கருத்துகளை எளிமையாகவும் சுவையாகவும் கொண்டு செல்ல வேண்டும்.

கதைகள் மற்றும் உவமைகள் மூலம் கற்பித்தல்:

தொல்காப்பியக் கோட்பாடுகளை நேரடியாகக் கடினமான இலக்கண விதிகளாகக் கற்பிப்பதற்குப் பதிலாக, அவற்றை எளிய கதைகளாகவும் கதாபாத்திரங்களாகவும் மாற்றிக் கற்பிக்கலாம்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளையும் அவற்றுடன் தொடர்புடைய நிலப்பரப்பு, விலங்குகள், பறவைகள், தாவரங்கள் மற்றும் மக்களின் வாழ்வியல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கதைகளாகச் சிறார்களுக்கு அறிமுகப்படுத்தலாம்.

பாடல்கள், கூத்து மற்றும் நாடகங்கள்:

தொல்காப்பியக் கருத்துகளை எளிய மெட்டுகளில் பாடல்களாகவும், சிறு நாடகங்கள், கூத்துகள் மற்றும் பாவைக்கூத்து போன்ற கலைவடிவங்களாகவும் காட்சிப்படுத்தலாம்.

விளையாட்டு வழிக் கற்றல்:

சொற்களைப் பிரித்துப் பார்த்தல், சொற்களை இணைத்தல், திணைகளையும் அவற்றுக்குரிய இயற்கைச் சூழலையும் பொருத்துதல், புதிர்கள் மற்றும் வினாடி-வினாக்கள் போன்ற விளையாட்டுகள் மூலம் தொல்காப்பியக் கருத்துகளைச் சிறார்களுக்கு எளிதாக அறிமுகப்படுத்தலாம்.

இயற்கையோடு இணைந்த களப்பயணம்:

மலை, காடு, வயல், கடல் போன்ற இயற்கைச் சூழல்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று, தொல்காப்பியத்தின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய கருத்துகளை நேரடி அனுபவத்தின் மூலம் விளக்கலாம்.

நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடு:

வண்ணமயமான சித்திரக் கதைகள், குறும்படங்கள், அனிமேஷன் காணொளிகள், இணையவழிக் கற்றல் கருவிகள் மற்றும் மொபைல் செயலிகள் ஆகியவற்றின் மூலம் தொல்காப்பியக் கருத்துகளை இன்றைய தலைமுறையினருக்கு சுவாரசியமான முறையில் கொண்டு செல்ல முடியும்.

சிறார்களிடம் ஏற்படும் பயன்கள்:

சிறுவயதிலேயே தொல்காப்பியத்தின் அடிப்படைக் கருத்துகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் சரியான உச்சரிப்பு, சொல்வளம் மற்றும் மொழிப் பயன்பாட்டில் தெளிவு போன்றவை வளரக்கூடும். அதனுடன் சிந்தனைத்திறன் மற்றும் படைப்பாற்றலும் மேம்படலாம்.

ஐந்திணைக் கோட்பாடு மூலம் நிலத்தையும் மனிதனையும் இயற்கையையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்திப் பார்க்கும் பார்வை உருவாகும். இதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வும் சிறார்களிடம் வளர்க்கப்படலாம்.

அதேவேளை, தமிழர்களின் பழமையான வாழ்வியல், விருந்தோம்பல், உறவுமுறைகள், அறச்சிந்தனைகள் மற்றும் பண்பாட்டு மரபுகளை அறிந்துகொள்வதன் மூலம் அவர்களிடையே மொழி மற்றும் பண்பாட்டு அடையாள உணர்வும் வலுப்பெறும்.

மெய்ப்பாட்டியல் மற்றும் உவமவியல் போன்ற கருத்துகளைப் படைப்பாற்றலுடன் கற்பிப்பதன் மூலம் குழந்தைகளின் கற்பனைத்திறன், உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் திறன் மற்றும் படைப்புச் சிந்தனை ஆகியவற்றையும் வளர்க்க முடியும்.

உலகைப் பற்றிய தொல்காப்பியரின் பார்வை:

தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் மொழியையும் இலக்கியத்தையும் தாண்டி உலகம் மற்றும் உயிர்களின் இயல்பு குறித்த சிந்தனைகளையும் உள்ளடக்கியுள்ளது.

" நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின் "

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனக் குறிப்பிடப்படும் ஐம்பூதங்களின் கலவையால் உலகம் அமைந்துள்ளது என்ற கருத்தில் "கலந்த மயக்கம்" என்ற சொற்றொடர் கவனத்திற்குரியது. ஒன்றோடொன்று தொடர்புகொண்டும் தனித்தன்மையை இழக்காமலும் இயற்கைக் கூறுகள் இணைந்து உலகை உருவாக்குகின்றன என்ற பார்வையை இத்தொடர் வெளிப்படுத்துவதாகக் கொள்ளலாம். இத்தகைய கருத்துகளை இன்றைய அறிவியல் மற்றும் சூழலியல் சிந்தனைகளின் பின்னணியில் மீளாய்வு செய்வது புதிய ஆய்வுகளுக்கு வழிவகுக்கக்கூடும்.

தொல்காப்பியம் - தமிழ்ச் சிந்தனையின் கருவூலம்:

தமிழறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழில் அறிவியல் நூல்களின் வளர்ச்சி குறித்த வரலாற்றுப் பார்வையின் தேவை குறித்து வலியுறுத்தியுள்ளார். தமிழிலக்கிய வரலாறு தமிழர்களின் சிந்தனை வரலாற்றையும் பிரதிபலிக்க வேண்டுமெனில், தமிழில் உருவான அறிவியல் மற்றும் அறிவுசார் மரபுகளும் முறையாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

அந்த வகையில், செழுந்தமிழின் இலக்கண மற்றும் இலக்கியச் செல்வமாகத் திகழும் தொல்காப்பியம் தமிழ் மொழியின் செவ்வியல் தன்மைக்கு வலுவான சான்றாக விளங்குகிறது. அதன் மொழியியல், இலக்கிய, பண்பாட்டு மற்றும் வாழ்வியல் பரிமாணங்களைத் தமிழர்கள் அனைவரும் அறிந்துகொள்வது இன்றியமையாததாகும்.

நீண்ட காலமாகப் புலமைமிக்க அறிஞர்களின் ஆய்வறைகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த தொல்காப்பியத்தை, இன்றைய தலைமுறையினருக்கும் குறிப்பாக சிறார்களுக்கும் எளிமையான முறையில் கொண்டு சேர்ப்பது தமிழாசிரியர்கள், ஆய்வாளர்கள், பெற்றோர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளின் முக்கியப் பொறுப்பாகும். இந்த நோக்கத்தின் ஒரு பகுதியாகவே, இளம் தலைமுறையினரை மையமாகக் கொண்டு இம்மாநாடு முன்னெடுக்கப்படுவது பாராட்டத்தக்க முயற்சியாகும்.

ஆதரவு வழங்குவோம்:

ஒரு பன்னாட்டு மாநாட்டை நடத்துவதற்கு பெருமளவிலான நிதியும் பலரது தன்னார்வப் பங்களிப்பும் தேவைப்படுகிறது. தமிழ் மொழியின் வளர்ச்சியையும் அதன் பரவலாக்கத்தையும் கருத்திற்கொண்டு, தமிழ் ஆர்வலர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் மற்றும் நிறுவனங்கள் தங்களால் இயன்ற நிதியுதவியையும் ஒத்துழைப்பையும் வழங்குமாறு மாநாட்டுக் குழுவினர் அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றனர்.


தொல்காப்பியம் கடந்த காலத்தின் நினைவுச் சின்னம் மட்டுமல்ல. அது தமிழ் மொழியின் கட்டமைப்பு, தமிழரின் வாழ்வியல், இலக்கியச் சிந்தனை, இயற்கைப் பார்வை மற்றும் பண்பாட்டு மரபு ஆகியவற்றை இணைக்கும் அறிவுக் கருவூலமாகும்.

அத்தகைய அரிய அறிவுச் செல்வத்தை எதிர்காலத் தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பதே இன்றைய தலைமுறையின் வரலாற்றுப் பொறுப்பாகும்.

"தொல்காப்பியத்தைப் பாதுகாப்போம் தொல்காப்பியத்தைப் புரிந்துகொள்வோம் தொல்காப்பியத்தை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவோம்."

இம்மாநாட்டில் கலந்துகொள்ள விரும்புவோர் தங்களைப் பதிவு செய்துகொள்ள மாநாட்டுக் குழுவினர் வழங்கியுள்ள இணையவழிப் பதிவுத் தளத்தைப் பயன்படுத்தலாம்.
(http://www.zeffy.com/en-2nd-world-tholkappiyam-rehearch-sep-2006)






# கனடாவில் 2வது உலகத் தொல்காப்பிய மாநாடு!

## செப்டம்பரில் கோலாகலமாக நடைபெற ஏற்பாடு!

கனடிய செய்திகள் Canadian News

**- த.சிவபாலு B.Ed.Hons. M.A.**

வள்ளுவருக்கும் முந்தைய பழம்பெரும் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் செறிவை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் நோக்கில், கனடா தொல்காப்பிய மன்றம் சார்பில் 2-வது உலகத் தொல்காப்பிய மாநாடு எதிர்வரும் செப்டம்பர் 19, 20 ஆகிய தேதிகளில் கனடா, மார்க்கம் நகரில் உள்ள "பில் ஹோகார்த் உயர்நிலைப் பள்ளியில்" (Bill Hogarth Secondary School-100 Donal Sim Ave. Markham, ON. L6B 0R1) நடைபெறவுள்ளது.

"எதிர்காலச் சந்ததியினருக்குத் தொல்காப்பியத்தைக் கடத்துதல்" என்ற முதன்மை கருப்பொருளில் நடைபெறும் இம்மாநாட்டில் உலகெங்கிலுமிருந்து 350-க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. 2015-இல் தொடங்கப்பட்ட கனடா தொல்காப்பிய மன்றம், 2016 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளில் வெற்றிகரமாக மாநாடுகளை நடத்தியதைத் தொடர்ந்து, தற்போது 2-வது உலக மாநாட்டை ஒருங்கிணைக்கிறது.

மாநாட்டின் சிறப்பம்சங்கள்:

மாணவர் & சிறார் பங்கேற்பு: இளைய தலைமுறையினரை மையப்படுத்தி வினாடி-வினா போட்டிகள், தொல்காப்பியம் தொடர்பான கலை நிகழ்ச்சிகள், காட்சியமைப்புகள், நாடகங்கள் மற்றும் பேச்சுப் போட்டிகள் இடம்பெறுகின்றன.

வளர்ந்தோருக்கான நிகழ்வுகள்: தமிழ் அறிஞர்களின் ஆய்வரங்கங்கள் மற்றும் வினாடி-வினா போட்டிகள்.

தொல்காப்பியத்தின் முக்கியத்துவமும் நன்மைகளும்:

நவீன மொழியியல் ஒப்பீடு: தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம் மற்றும் சொல்லதிகாரம் ஆகியவை நவீன ஒலிப்பியல் (Phonetics) மற்றும் தொடரியல் (Syntax) விதிகளுக்கு இணையானவை.

வாழ்வியல் & சூழலியல்: உலக மொழிகளில் சொற்களுக்கு மட்டும் இலக்கணம் வகுக்கப்பட்ட சூழலில், பொருளதிகாரம் மூலம் மக்களின் அகம், புறம் சார்ந்த வாழ்வியலையும் ஐந்திணை வழியே சூழலியலையும் (Eco-criticism) விளக்கிய தனித்துவம் கொண்டது.

கணிப்பொறி தமிழ்: செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் கணினி மொழியியலுக்குத் தொல்காப்பிய விதிகளைப் பயன்படுத்தும் புதிய ஆய்வுகளுக்கு இது அடித்தளமிடுகிறது.

சிறார்க்குக் கடத்தும் வழிமுறைகள்: தொல்காப்பியத்தை எளிய கதைகள், பாவைக்கூத்து (Puppet show), விளையாட்டுகள் (Gamification), களப்பயணங்கள் மற்றும் அனிமேஷன் குறுங்காணொளிகள் வழியாகக் குழந்தைகளுக்குக் கற்பிப்பதன் மூலம் அவர்களின் மொழி அறிவு, சூழலியல் விழிப்புணர்வு, கற்பனைத்திறன் மற்றும் உணர்ச்சி மேலாண்மை (Emotional Intelligence) மேம்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அழைப்பும் வேண்டுகோளும்: "தமிழிலக்கிய வரலாறு தமிழர்களின் சிந்தனை வரலாற்றைச் சுட்டுவதாக அமைய வேண்டும்" என்ற தமிழறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பியின் கூற்றுக்கிணங்க, பண்டிதர்களிடம் மட்டும் இருந்த தொல்காப்பியத்தை எளிய மக்களுக்கும் சிறார்க்கும் கொண்டு சேர்ப்பதே இம்மாநாட்டின் நோக்கம்.

இம்மாநாட்டைச் சிறப்பாக நடத்தப் பெருந்தொகை நிதி தேவைப்படுவதால், தமிழ் ஆர்வலர்கள் நன்கொடைகள் வழங்கி ஆதரவளிக்குமாறு மாநாட்டுக் குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர். மாநாட்டில் பங்கேற்க விரும்புவோர் ஹுநககல இணையதளம் வழியாகப் பதிவு செய்துகொள்ளலாம்.

## Disciple of Guru Rajanie Selvapragasam, Reshali Ramesh's Bharathanatya Arangetram was a long artistic work comprising dance pieces presented with great dedication!

# நடனச் செல்வி றெசாலி ரமேஷின் பரதநாட்டிய அரங்கேற்றம் அர்ப்பணிப்புடன் சமர்ப்பிக்கப் பெற்ற நடன உருப்படிகள் மற்றும் நீண்ட ஒரு கலைப்படைப்பாகவும் திகழ்ந்தது!







"அபிநயாலயா நாட்டியாலயம்" பரதக் கல்லூரியின் ஆசிரியை ரஜனி செல்வப்பிரகாசம் அவர்களின் மாணவியும் ரமேஷ் ரட்ணசிங்கம் - ரவணா ரட்ணசிங்கம் தம்பதியின் புதல்வியுமான நடனச் செல்வி றெசாலி ரமேஷ் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றமானது கடந்த 15-08-2026 அன்று கனடாவின் ஒசாவா நகரில் நடைபெற்றது.

அன்றையதினம் நடனச் செல்வி றெசாலி ரமேஷ் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றத்தை அமைதியாக இருந்து ரசித்து அனுபவித்த போது அது. அர்ப்பணிப்புடன் சமர்ப்பணம் செய்யப்பெற்ற நடன உருப்படிகள் அடங்கிய நீண்ட ஒரு கலைப்படைப்பாகத் திகழ்தது என்றால் மிகையாகாது.

குருவின் திறமை மற்றும் நடன நங்கையின் அர்ப்பணிப்பு மற்றும் அவதானிப்பு ஆகியவை நீண்ட காலப் பயிற்சியின் பின்னர் அரங்கேற்றம என்ற மேடைக்கு எடுத்துவரப்பட்டபோது, பக்கவாத்தியக் கலைஞர்களின் அபாரத்திறமை மற்றும் இசையும் நடனமும் இணைந்த ஒரு "கூட்டு கலைப்படைப்பாக" சில மணி நேரங்களுக்கு சபையினருக்கு ஒது இதமான கலை அனுபவமாகவும் அமைந்திருக்கலாம் என்ற நம்பிக்கை எமக்குத் தோன்றியது.

அன்றைய தினம் மண்டபம் நிறைந்த கலா ரசிகர்கள் மற்றும் நடனசங்கீத ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள், கலைஞர்கள் என பன்முக ஆற்றல் கொண்டவர்களின் முன்பாக தனது அற்புதமான அரங்கேற்றத்தை மிகவும் நேர்த்தியாகவும் அவதானமாகவும் உயர்ந்த தரத்தில் வழங்கியநடனச் செல்வி றெசாலி ரமேஷ் அவர்களை எத்தனை தடவைகள் என்றாலும் பாராட்டலாம் என்ற உணர்வை அனைவருக்கும் தந்திருக்க வேண்டும் என்பதும் உறுதியான ஒரு பார்வையே ஆகும்.!

அரங்கேற்றத்தை முழுமையாக தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார் பேராசிரியர் ஆர். சுதர்சன் அவர்கள் .ஆழமான ஒரு கலைசார்ந்த வாழ்த்துரையை வழங்கிச் சென்றார் பிரதம விருந்தினர் திருமதி சுனிற்றா பிரகாஸ்.


தனது பாடசாலைக் கல்வியிலும் , தொண்டுப் பணியிலும் பின்னர் உயர் கல்வியிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் பெற்றோரின் ஒத்துழைப்புடன் முன்னேறிய நடனச் செல்வி றெசாலி ரமேஷ் அவர்கள் தனது கலைப் பயணத்திலும் ஆடல்வல்லானின் ஆசியைப் பெற்றும் மேலும் முன்னேற்றங்களைக் கண்டு தனது பெற்றோருக்கும் குருவிற்கும் எமது கனடிய தமிழ்ச் சமூகத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.!

***பார்வை: "உதயன்" சத்தியன்***
***படங்கள்: "தமிழ்மிறர்" சார்ள்ஸ்***



## இவ்வார ராசிபலன்

*( 18 பக்கம் தொடர்ச்சி)*




**கும்பம்:** புதிய மாற்றங்களும் முன்னேற்றமும் நிறைந்த வாரமாக இந்த வாரம் அமையும். பணியிடத்தில் உங்கள் யோசனைகளுக்கு நல்ல வரவேற்பு கிடைத்து புதிய பொறுப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. தொழில் மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைத்து பொருளாதார நிலை மேம்படும். பணவரவு அதிகரித்தாலும் தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது. குடும்பத்தில் இருந்த மனக்கசப்புகள் நீங்கி மகிழ்ச்சியான சூழல் உருவாகும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு போட்டித் தேர்வுகளிலும் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். உடல்நலத்தில் சிறிய சோர்வு அல்லது தூக்கமின்மை ஏற்படலாம் ஓய்விற்கு முக்கியத்துவம் கொடுங்கள். புதிய முயற்சிகளை தன்னம்பிக்கையுடன் தொடங்கினால் வெற்றி நிச்சயம்.
*இந்த வாரம் இளநீல நிறம் அதிர்ஷ்டத்தை தரும். அதிர்ஷ்ட எண்: 4.*
*அதிர்ஷ்ட நாட்கள்: சனி, புதன். இந்த வார மதிப்பெண்: 89/100.*



**மீனம்:** அதிர்ஷ்டமும் மனநிறைவும் அதிகரிக்கும் வாரமாக இந்த வாரம் அமையும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். பணியிடத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைத்து பதவி உயர்வு அல்லது ஊதிய உயர்வு தொடர்பான நல்ல வாய்ப்புகள் உருவாகலாம். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் மூலம் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் நிலவும். வாழ்க்கைத்துணையுடன் அன்பும் புரிதலும் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் கவனத்துடன் செயல்பட்டால் சிறந்த வெற்றியை அடைவார்கள். உடல்நலத்தில் சிறிய அலர்ஜி அல்லது சளி தொடர்பான பிரச்சினைகள் தோன்றலாம் உணவு மற்றும் ஓய்வில் கவனம் செலுத்துங்கள். முக்கியமான முடிவுகளை நம்பிக்கையுடன் எடுத்தால் நல்ல பலன் கிடைக்கும்.
*இந்த வாரம் மஞ்சள் நிறம் அதிர்ஷ்டத்தை தரும். அதிர்ஷ்ட எண்: 7.*
*அதிர்ஷ்ட நாட்கள்: வியாழன், வெள்ளி. இந்த வார மதிப்பெண்: 90/100.*



Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198


கனேடிய மண்ணில் மாபெரும் கண்டனப்போராட்டம்
செம்மணி எழுச்சி – அணையா தீபம்
விழித்தெழு
தமிழா
உரிமைக் குரல் கொடுக்க அனைத்து
தமிழரும் வாரீர்...
30 AUGUST
ALBERT CAMPBELL SQUARE
150 Borough Dr, Scarborough, ON M1P 0B1
5 PM ONWARDS
தொடர்புகளுக்கு
+1 647 627 7814 | +1 647 989 2539 | +1 647 302 1189
ORGANIZED BY BEHIND ME MEDIA & BEHIND ME FOUNDATION


MORTGAGE
FINANCIAL SOLUTIONS
COMMERCIAL
RESIDENTIAL
VACANT LAND
INDUSTRIAL
CONSTRUCTION
OUR SERVICE
Purchase
Builder Purchase
MLS Purchase
Private Purchase
Equity line of Credit
Refinance
Renewal
CALL US
NESAN
416-908-5656
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
www.nesan.ca
WE DEAL WITH ALL BANKS
CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332
Scotiabank
FIRST NATIONAL FINANCIAL LP
TD Canada Trust
Manulife
NATIONAL BANK
Desjardins
RFA
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages
55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

எமது மக்களுக்கு நன்கு அறிமுகமான
Medcentre Health
Synchronizing Health Sectors
தற்போது எமது சேவைகளும் விரிவுபடுத்தப்பெற்றுள்ளன!
ONE LOCATION. BUT COMPLETE MEDICAL CARE
(416) 297-7777
Medcentre Health
2225 Markham Road
(Ground Floor)
Scarborough, ON M1B 2W4
(Markhan&Finch)

உதயம் 1586 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 28, 2026



# குரு ரேணுகா விக்னேஸ்வரனின் மாணவி சுவேதாவ – ின் பரதநாட்டிய அரங்கேற்றத்தை மெருகூட்டும் வண்ணம் தங்களை அர்ப்பணித்த பக்கவாத்தியக் கலைஞர்கள்!



கடந்த 22-08-2026 சனிக்கிழமையன்று ஸ்காபுறோ சீனக் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற "கலையருவி நுண்கலைக் கூடத்தின்" குரு ரேணுகா விக்னேஸ்வரனின் மாணவியும் அரங்கேற்றச் செல்வியுமான சுவேதா கண்ணன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் விறுவிறுப்பாகவும் கச்சிதமாகவும் தொடர்ச்சியாக இடம்பெற்றதை நடன ஆசிரியைகள் மற்றும் கலா ரசிகர்கள் நன்கு உணர்ந்து ரசித்தார்கள் என்று கூறலாம். அன்றைய அரங்கேற்றத்தை மெருகூட்டும் வண்ணம் தங்களை அர்ப்பணித்த பக்கவாத்தியக் கலைஞர்களோடு இணைந்து குரு ரேணுகா அவர்களும் தனது முழுதான அர்ப்பணிப்பையும் வழங்கி பக்க வாத்தியக் கலைஞர்ளோடு இசைவாகப் பயணித்தும் அரங்கேற்றச் செல்விக்கு உற்சாகத்தை வழங்கியும் தங்கள் பங்களிப்பை பூரணமாக வழங்கியதை அவதானிக்க முடிந்தது.

## Two vehicles belonging to Liberal MP Salma Zahid were set on fire in front of her Scarborough home.

# லிபரல் பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அவர்களது ஸ்காபுறோ இல்லத்திற்கு முன்பாக அவரது இரண்டு வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன



ரொறன்ரோ பெரும்பாகத்தில் வசிக்கும் பல்லின மக்களால் நன்கு விரும்பப்பெறும் பெண்மணியான லிபரல் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அவர்களின் ஸ்காபுறோ இல்லத்திற்கு முன்பாக அவரது இரண்டு வாகனங்கள் வியாழக்கிழமை அன்று 27ம் திகதி அதிகாலை 1.30 மணியளவில் தீக்கிரையாக்கப்பட்டு அந்த இடத்தில் சுமார் 6 வாகனங்கள் அருகருகே நிறுத்தப்பட்டிருந்த வேளையில் உடனடியாக செய்தி அறிந்து அங்கு விரைந்து வந்த ரொறன்ரோ தீயணைப்புப் பிரிவினர் இரண்டு வாகனங்கள் எரிந்த நிலையில் தீயை அணைத்தனர் என பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் தெரிவித்தார்.

# தமிழர் நிர்வகிக்கும் RemitBee நிதி நிறுவன தலைவர் பிரதீபன் யோகநாதன் இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை ரொறன்ரோவில் சந்திக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றார்



கனடாவைத் தலைமை அலுவலகத்தைக் கொண்டும் உலகின் பல நாடுகளில் கிளைகளைக் கொண்டும் தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் **RemitBee** நிதி நிறுவன தலைவர் பிரதீபன் யோகநாதன் அவர்கள் வியாழக்கிழமை அன்று 27ம் திகதி காலை ரொறன்ரோ மாநகரில் இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை ரொறன்ரோவில் சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளார்.

ரொறன்ரொவில் இயங்கும் கனடாவிற்கான இந்திய துணைத்தூதுவர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தோ-கனடா வர்த்தக சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் பிரதீபன் யோகநாதன் அவர்களும் முக்கிய வர்த்தகப் பிரமுகர்களில் ஒருவரான கலந்து கொண்டார்.

பிரதீபன் யோகநாதன் அவர்களை வாழ்த்த விரும்புவோர் **pratheepan@remitbee.com** என்னும் மின்னஞ்சலுக்கு அவற்றை அனுப்பலாம்.

# ஸ்காபுறோவில் Finch – Markham வீதிகளின் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள Medcentre Family Clinic வைத்திய நிலையத்தில் தமிழ் பேசும் வைத்தியர் பணியாற்றுகின்றார்

ஸ்காபுறோவில் **Finch – Markham** வீதிகளின் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள **Medcentre Family Clinic** வைத்திய நிலையத்தில் தமிழ் பேசும் வைத்தியர் ஒருவர் தற்போது பணியாற்றுகின்றார். கனடாவில் மருத்துவப் பயிற்சி பெற்று சுமார் 7 ஆண்டுகள் குடும்ப மருத்துவராகப் பணியாற்றிய அனுபவத்துடன் டாக்டர் விஜிதா முகுந்தன் அவர்களே இங்கு பணியாற்றும் சிறந்த வைத்தியர் ஆவார்.

வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும் இந்த வைத்திய நிலையத்தை தொடர்பு கொள்ள 416-297-7777 என்னும் இலக்கத்தை அழைக்கலாம்.

(உள்ளே 2ம் பக்கத்தில் விளம்பரத்தைப் பார்க்கவும்)

Medcentre Health
Synchronizing Health Sectors
Medcentre Family Clinic
Comprehensive, patient-centred care for you and your entire family, from Children to Grandparents.
✓ Now Open
✓ Accepting New Patients